Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 9

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

| | | |
|---|---|---|
| மலர் 40 | பிலவங்க புரட்டாசி 1967 செப்டம்பர் | இதழ் |

## சைவப் பெரியார்

# திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை

## அவர்களின்

# "எண்பதாம் ஆண்டு"

## நிறைவு விழா மலர்.

பத்திராசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை: இ[illegible]சங்கர

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

## செயற்குழுக் கூட்ட அறிக்கை

24—9—67 ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரிபார்த்தல், ஆண்டுவிழா முதலிய பொருள்கள் பற்றி முடிவுகள் செய்யப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறுது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிருர்கள். (செயலாளர்)

## திருமணம்

நம் சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணசலம் அவர்களின் அருமைத் திருமகளார் திருமதி அன்னபூரணி அம்மையார் M. B. B. S. அவர்களுக்கும் மணலி திரு வ. விசுவநாத பிள்ளை அவர்கள் திருமகனர் திரு பாலன் M. B., B. S, அவர்களுக்கும் பந்தநல்லூருக் கடுத்த திருச்சிற்றம்பலத்தில் மணமகளார் இல்லத்தில் 24-8-67 அன்று திருமணம் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. நம் சமாஜச் சார்பில் புதுமணமக்களை வாழ்த்தி சமாஜச் செயலாளர் திரு சி. வடிவேல் பிள்ளையவர்கள் வாழ்த்துப் பாக்களைப் பாடி வாழ்த்தினர்.

இருமன மொருமை கொள் புதுமணமக்கள் இருவரும் நன்கு சமயப் பற்றும் கல்வி மேம்பாடும் கொண்ட பரம்பரையான நற்குடியில் பிறக்கும்பேறு பெற்றவர்கள். தங்கள் குடிப்பெருமைக் கொத்து சமயம், மொழியாதிய தொண்டுகளைச் செய்து எல்லா நற்பேறுகளும் இனிது பெற்று நன்னர் நீடுவாழ எல்லாம் வல்ல பரம்பொருள் அருள்பாலிக்க அவனிணையடிகளையே வாழ்த்தி வணங்குகின்ருேம்.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் சிதம்பரம் திரு. N. M. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் அருமைச் செல்வர்கள் திரு. சிவகுமாருக்கும் திரு. விவேகாநந்தனுக்கும் முறையே காட்டு முள்ளூர் திரு. M. பதஞ்சலிப்பிள்ளை அவர்கள் திருமகளார் திருமதி கலாவதியையும் தலைச்சங்காடு திரு. L. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள் திருமகளார் திருமதி தங்கத்தையும் சிதம்பரம் தெற்கு வீதி, 54–55 கட்டிடத்தில் பெரியோர்கள் 8–9–67 அன்று திருமணம் செய்வித்தனர். திருமணம்கொண்ட புதுமணமக்கள் எல்லாரும் தமிழையும் சைவத்தையும் தகவுறக் காத்து ஒல்லும் வகையான் அறவினை போற்றி எல்லா நற்பேறுகளும் இனிது பெற்றிலங்க அம்பலவாணன் அருள்சுரக்க அவனிணையடிகளையே வாழ்த்தி வணங்குகின்ருேம்.

Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40 | பிலவங்க ஞூ புரட்டாசி 1967 செப்டம்பர் | இதழ் 9

## ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் எண்பதாண்டு நிறைவு

ஆசிரியர்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தலைவராகிய ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களுக்கு 14-8-67 அன்று எண்பது ஆண்டு நிறைகிறது. எண்பதாண்டு நிறைவைச் சதாபிஷேகம் என்று சொல்லுவார்கள். "ஆயிரம் பிறை கண்டவர்" என்று சொல்வதும் வழக்கு; எண்பது ஆண்டுகளுள் ஆயிரம் சந்திரன் தோன்றி வளர்ந்து, மறைந்து மீண்டும் தோன்றுவது நிகழ்ந்திருக்கும்; ஆதலால் இப் பெயர் ஏற்பட்டது. இச்சமயம் பிள்ளை அவர்களுக்கு நாடெங்கும் உள்ள பல்லாயிரக் கணக்கான சைவ நன் மக்களோடு சேர்ந்து சமாஜத் தாராகிய நாமும் நம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேலும் இவர் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து, சைவத் தொண்டு புரிய அருளுமாறு சிவபரம் பொருளைப் பிரார்த்திக் கின்றோம்.

"ஈக்குர் — சச்சிதானந்த சுவாமிகள் என்றொரு பெரியார் சென்னையில் வதிந்தார். அவர் வேதாந்த பானு. அவரிடத்தில் வேதாந்தம் பயின்றவர் புலர். அவருள்

ஒருவர் சொ. சபாபதி பிள்ளை என்பவர். இவர் மனைவியார் மீனாட்சி அம்மையார். இவ்விருவர் தம் ஆருயிர் ஒன்றிய இல்வாழ்க்கை ஓர் அன்பாழி. அவ் வாழியினின்றுந் திரண்டெழுந்த அமிழ்தம் நம் சச்சிதானந்தம்.'' (1887) திரு. வி. க,

இவர் சென்னை வெஸ்லி பள்ளியில் முதல் பாரம் படித்த கலியாண சுந்தரம் என்ற மாணவரோடு நெருங்கிய தோழமை பூண்டார். அவரே பிற்காலத்தில் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் என்று பிரசித்தமாய் விளங்கிய தமிழ்ப் பெரியார். இளம்பருவத்தில் பூண்ட உள்ளங் கலந்த தோழமை கலியாண சுந்தரனார் காலமாகும் வரையில் இணைபிரியாத உள்ளத் தோழமையாக வளர்ந்தது. அந்தத் தலைமுறையில் இவ்விருவரோடும் நெருங்கிப் பழகியவர்கள் அத் தோழமையின் ஆற்றலை நன்கு உணர்ந்திருந்தார்கள்.

"எனக்கும் சச்சிதானந்தத்துக்கும் உற்ற உறவை எம்மொழியால் இயம்ப வல்லேன? தம்பி இல்லா எனக்கு, அவர் சத்தாய்—சித்தாய்—ஆனந்தமாய் என்னுள்ளங் கவரும் ஓர் உயிர்த் தம்பியாய்க் கிடைத்தனர் என்று சுருங்கச் சொல்லும் அளவில் நின்று விடுகிறேன்"— திரு. வி. க.

பள்ளியில் பயின்ற காலத்தில் ஆசிரியராயிருந்த வாசுதேவாசாரியார் இவர் உள்ளப் பாங்கை உருவாக்கியவர்களில் முக்கிய மானவர். அப் பெரியார் தாம் சிறந்த வைணவராயிருப்பினும், பிறமத ஆசாரங்களை நன்கு போற்றியவர். அவருடைய கடமையுணர்ச்சி, தோற்றப் பொலிவு, அன்புள்ளம், மாணுக்கரிடம் கொண்ட கனிவு, போதனைத் திறன், கண்டிப்பு, சீரிய ஒழுக்கம் ஆகிய பெருங்குணங்கள் இவரது இளம் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தன. அதன பயனால், ஆசிரியப் பணியே மேலான பணி என்ற ஒரு பெருநோக்கு இவருக்கு உதித்தது. இவ்வாசாரியர் இவருக்கு ஏகமூர்த்தி வழி

பாட்டை நன்கு உணர்த்தினர். "ஒரு தெய்வத்தையே உபாசித்து வா, பிற தெய்வங்களைத் தேடிச் சென்று வழிபட வேண்டாம். ஆனால் பிற தெய்வம் எதிர்ப்பட்ட விடத்து, அதை உன் தெய்வமாகவே கருதி வழிபடுவாயாக" என்பது அவரது அறிவுரை.

இவர் பி. ஏ. வகுப்பில் தத்துவ சாஸ்திரப் பாடம் எடுத்துப் படித்தார். பச்சையப்பன் கல்லூரியில் படித்த காலத்தில் அங்கு தலைவராயும், பேராசிரியருமாயிருந்த டூரு என்ற ஆங்கிலேயர் இவரிடத்தில் நிரம்ப அன்பு காட்டினர். அவருடைய சிறந்த ஆசிரியத் தன்மையில் இவர் பெரிதும் ஈடுபட்டார். இவர் வாழ்க்கை நெறிப்படக் காரணமாயிருந்தவர்களில் அவரும் முக்கியமானவர். அக்காலத்தில் ஆங்கில நாத்திக நூல்கள் எங்கும் பிரசாரம் எய்தி இருந்தன. ஒருநாள் இவர் நாத்திக நூலொன்றை வைத்துப் படித்துக் கொண்டிருந்ததை ஆசிரியர் கண்டார். மிக்க மனம் வருந்தி, அன்றைய வகுப்பில் நாத்திக வாதத்தைக் கண்டித்து, மாணுக்கர் வாழ்க்கையில் தெய்வ பக்தி எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றி மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருந்தார். மணி அடித்ததும் தெரியவில்லை; நின்று கொண்டே பேசினர். இவ்வாறு டூரு காட்டிய பரிவு இவர் மனத்தில் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது.

அங்கிருந்த காலத்தில் திருமணம் செல்வகேசவராய முதலியார், வாதத்தில் வல்ல சைவசித்தாந்தியான கதிரைவேல் பிள்ளை முதலியோர் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. பின்னவரே இவரும் திரு. வி. கலியாணசுந்தரனாரும் சைவத்தில் ஆழ்ந்த பற்றுக் கொள்ளக் காரணமாயிருந்தவர்.

இவர் தம் தந்தை இறுதி நாள் வரையிலும் சிவபூஜை செய்தவர். இவர் வீர சைவ மரபில் வந்தவர். பாம்பன் சுவாமிகளுடைய சீடராக ஆனர். அவரிடம் சடாட்சர உபதேசம் பெற்றார். அவர் நூல்கள் சிலவற்றுக்கு உரை

எழுதிப் பதிப்பித்தார். பிற்காலத்தில்ஞானியார்சுவாமிகள் தொடர்பு ஏற்பட்ட போது, அவரிடம் தீட்சை பெற்று சிவலிங்க பூஜை எழுந்தருளுவிக்கப் பெற்றுக் கொண்டார்.

சில காலம் இவர் கல்லூரியில் தர்க்கசாஸ்திர பாட ஆசிரியராக இருந்தார். பின்னர் சென்னை அரசாங்கக் கல்வித் துறையில் பணியேற்று டிப்டி இன்ஸ்பெக்டர், டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸர், டிப்டி டைரக்டர் என்ற பதவிகளெல்லாம் முறையே வகித்து, ஓய்வு பெற்றுப் பின்னரும் அண்ணாமலை சர்வகலா சாலையில் ரிஜிஸ்திராராகவும் பணி புரிந்தார்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்கும் இவருக்கும் உள்ள தொடர்பு வேறெருவருக்கும் இல்லையென்று கூடச் சொல்லலாம். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜே. எம். நல்ல சாமிப்பிள்ளை இவரை சமாஜத்தில் அங்கத்தினராகச் சேர்த்தார். 1911-12ல் இவர் அதன் செயலாளராக இருந்தார். பின்னர் 1929 சிறப்பு மகா நாட்டிலும், 1931, 1938, 1950, 1960 ஆகிய ஆண்டு மகா நாடுகளிலும் தலைமை வகித்தார். 1945–46இல் சித்தாந்தம் பத்திரிகை ஆசிரியராகப் பணி புரிந்தார். சமாஜத்தின் மூலம் பல அறக் கட்டளைகளை நடத்தி வருகின்றார். சமாஜத்தின் உயிர் நாடி என்று சொல்லும்படி இவர் என்றும் விளங்கி வந்திருக்கின்றார். இந்தத் தள்ளாத வயதிலும் சைவக் கூட்டங்களுக்கெல்லாம் சென்று சைவ மக்களைத் தெய்வத்திடம் ஆற்றுப் படுத்தும் பொருட்டு அல்லும்பகலும் அனவரதமும் ஓயாதுஉழைத்துவருகின்றார்.

இவர் சமரச நோக்கு உடையவராயினும் சைவமக்கள் மதம் மாறுவது கண்டு பெரிதும் மனம் வருந்துவார். சைவ மக்கள் தங்கள் சமயத்தின் உண்மையையும் சிறப்பையும் சிறிதும் உணராதபடி வேற்று மதம் புகுவதை மிகவும் வன்மையாகக் கண்டித்துப் பேசுவார். ஞாலம் முழுவதும் சிவபெருமான் புகழே மிகவேண்டும் என்பதற்காகச் சைவர்களிடையே வார வழிபாட்டைத் தோற்றுவித்தார். இவருடைய சைவ சமயப் பிரசார ஆற்றலை நன்குணர்ந்த

சைவ மக்கள் இவரைச் "சைவ சமயப் பாதிரியார்" என்று அன்போடு கொண்டாடி வருகிறார்கள். இவர் தோற்று வித்த வார வழிபாட்டு இயக்கம் தமிழ் நாடெங்கும் நிரந் தரமாக நன்கு காலூன்றி இருக்கிறது.

இவர் தம் வாழ்க்கையில் இராம கிருஷ்ண பரம ஹம்சர், விவேகானந்தர், சாரதாமணி தேவியார், மகாத்மா காந்தி ஆகியோர்களை வழிகாட்டிகளாகக் கொண்டிருக் கிறார். சமயாசாரியர்களுக்குப் பிறகு பட்டினத்தாரும், தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகளும் சைவம் உய்யப் பிறந்து வழிகாட்டியவர்கள் என்பது இவர் கருத்து.

ஏழை மக்களின் சேவையும், சைவ ஆசாரம் காத்தலும் ஆகிய இரண்டும் சைவத்தின் இரண்டு ஈரல்கள் என்று அடிக்கடி சொல்லுவார். இவர் காசி, அலஹாபாத் சர்வ கலா சாலைகளிலும் ரிஷிகேசத்திலுள்ள சுவாமி சிவா நந்தர் கல்விச் சாலையிலும் சொற் பொழிவு ஆற்றி இருக்கிறார்.

இவரைப் பற்றிக் குறிப்பிடும் போது திரு. வி. கலியாண சுந்தரனார், "கல்விச் சாலையில் பயின்ற எங்கள் கூட்டத்தில் சச்சிதானந்தம் ஒருவரே பி. ஏ. பட்டம் பெற்றவர்" என்று பாராட்டிக் குறிப்பிட்டுள் ளார். அவர் திருமணம் நிகழ்ந்த போது நடந்த நிகழ்ச் சியை அவர் சொல்லிலேயே இங்குக் குறிப்பிடுவோம். "அன்றைய மாலையில் ஏதேனும் திருமணப படலம் ஒன்று எவரைக் கொண்டேனும் சொல் வித்தல் வேண்டும் என்று எண்ணினேன். பௌராணிகர் பலர் என் நண்பர். ஆனாலும் அன்பர் சச்சிதானந்தம் பிள்ளையைத் தவிர வேறு ஒருவரும் அன்று மனத்தில் தோன்றவில்லை. சச்சி தானந்தம் பிள்ளை என் வேண்டுதலுக்கிணங்கி வள்ளித் திருமணம் சொன்னார். இடை இடையே தெய்வ பக்தி, அறத்திறன் இல் வாழ்க்கையின் மாண்பு, ஒழுக்கத்தின் விழுப்பம் முதலியன அவரால் விளக்கப் பட்டன."

அடக்கமே வடிவான, இவர் பெரிய காரியம் சிறிய காரியம் என்ற வேற்றுமை பாராட்டாமல் எல்லாவற்றிலும் கலந்து கொள்வார். ஒருசமயம் அடையாற்றில் ஜே. கிருஷ்ணமூர்த்தி செய்த பிரசங்கம் ஒன்றைக் கேட்பதற்காக யாம் சென்றிருந்தோம். இரவு ஏழுமணி. ஒரு மாந்தோப்பில் கூட்டம்; இருட்டு; மரங்கள் இடையே மின் விளக்குகள் எரிந்தன. இருட்டில் பிரசங்கி அருகே சென்று அமர்ந்தால் நன்கு கேட்கலாம் என்று எண்ணி நெருங்கிச் செல்ல முற்பட்ட போது, காலில் கைத்தடி ஒன்று தடுக்கிற்று. குனிந்து தடவிப் பார்த்தால், அந்த இருளில், கொட்டும் பனியில், கருப்புக்கம்பளிச் சட்டையால் உடலை மூடி, தலையில் முண்டாசு கட்டி, தரையில் கைக்குட்டை விரித்து, அதன் மேல் உட்கார்ந்து இவர் கேட்டுக் கொண்டிருந்தார். இவருடைய தகுதிக்கு அந்தப் பிரசங்கத்தால் பயன் உணடா என்பது சந்தேகம், ஆயினும், பிரசங்கம் என்று பத்திரிகையில் பார்த்த உடனே இவருக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. இதுபோன்ற மற்றொரு சந்தர்ப்பம் மயிலாப்பூரில் வைத்தியத் திறமை பெற்ற சாமியார் நடத்திய ஒரு பாவை மகாநாட்டுக்குத் தற்செயலாகச் சென்றோம். அங்கும் இவர், சைவத்தின் பெருமை அறியாது பிறமதம் புகுந்து உழல்வோரை வன்மையாகக் கடிந்து பேசிக் கொண்டிருந்தார்.

இப்படியாக இவர் தமிழ் நாட்டிலுள்ள சன்மார்க்க சங்கங்கள், சைவ சபைகள், ஜீவகாருண்ய சங்கம், அறநிலையக் கழகங்கள், இந்து தரும சபைகள், மாணவர் இல்லங்கள் ஆகியவற்றோடு நீண்ட காலத் தொடர்பு கொண்டிருக்கிறார். இவருடைய சிறப்பான பண்புகளில் ஒன்று பிறர் பேசுவதைக் குறிப்பெடுத்தல். இவர் தலைவராயிருந்தாலும், பேச்சாளராயிருந்தாலும், கூட்டத்தில் ஒருவராயிருந்தாலும், கூட்டத்தில் யார் பேசினும் பேசுவதைக் குறிப் பெழுதி வைத்திருப்பார். தமிழ் நாட்டில் உள்ள பேச்சாளர்களின் வயதை நோக்க அனைவரும் சிறியவர்களே. எனினும் எல்லோர் பேச்சின் குறிப்பும் இவரிடம் காணப்படும். இவர் எழுதிய குறிப்பு நோட்டு

கள் இவர் இல்லத்தில் உடன் கணக்கில் இருக்க வேண்டும்.

இறைவன் அன்பு வடிவினன் என்று எப்போதும் உபதேசிப்பார். அது போலவே இறைவன் நீதி வடிவினன் என்றும் எங்கும் பேசி வருவார்.

இன்ன உரு இன்ன நிறம் என்று அறிவ
தேல் அரிது நீதி பலவும்
தன்ன உரு வாம்என மிகுத்த தவன்
நீதியொடு தான் அமர்விடம்
முன்னை வினை போய் வகையினால் முழு-
துணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்ன இருபோதும் மருவித் தொழுது
சேரும் வயல் வைகா விலே.

என்ற சம்பந்தர் தேவாரத்தில் இறைவன் நீதியோடு அமர்கின்றான் என்ற கருத்தை இவர் சளைக்காமல் எடுத்துப் போதிப்பார்.

"இவர் ஒழுங்கு முறையைத் தாமும் காப்பார். பிறரையும் காக்கச் செய்வார்" என்று திரு. வி. க. குறிப்பிடுவார்; "தமிழ் நாட்டில் கலைமலையாய், ஒழுக்க ஊற்றாய், தமிழ்த் தென்றலாய், சைவச் சாரலாய், வாரங் கொழிக்கும் வழிபாட்டு மணியாய், வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாய்ப் பொலி தரும் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை."

இவரிடத்தில் அன்பு காரணமாகப் பலவீனம் உண்டு என்று சிலர் சொல்லுவார்கள். மதமாற்றத்தைக் கண்டிப்ப தொன்று தவிர கடுஞ்சொல்லே இவர் நாவில் வராது.

சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் அடக்கத்திற்கு உறைவிடம், அன்புக்கு ஊற்று, ஒழுக்கத்திற்கு அச்சாணி,

நீதிக்கு நிலைக்களன், ஏழை மக்களின் சேவைக்கு இவர் உயிர் நாடி.

சச்சிதானந்தம் பிள்ளை, இந்த இருபதாம் நூற்றாண்டில் அருகி வருகின்ற பேராலமரத்தை ஒத்தவர். எங்கும் காலரீதியில் ஆல மரங்கள் சாய்ந்து விட்டன. இந்த ஓர் ஆலமரம் நின்று பெரும் பயன் தந்து வருகின்றது. இன்னும் நீண்ட காலம் இது பயன் தர ஆண்டவன் அருள் பாலிப்பானாக. நாமும் சென்று இதன் நிழலில் தங்கி, இளைப்பாறிப் புத்துயிர் பெறுவோமாக.

வாழ்க சச்சிதானந்தம்.

---

# "என் குருநாதர்"

(ச. நடேச முதலியார், தாம்பரம்)

1905ஆம் ஆண்டில் இராயப்பேட்டை முத்து முதலி தெருவில் எங்கள் வீட்டில் நடந்த சீமந்த முகூர்த்தத்திற்குப் பக்கத்து வீட்டிலிருந்த ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் அங்கத்தினர் சிலரோடு உயர்திரு. திரு. வி. க அவர்களும், உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் வந்திருந்தனர். அன்று முதல் எனக்குச் சபையின் தொடர்பும் திரு. பிள்ளை அவர்களின் நட்பும் ஏற்பட்டது. பின்னர் தினந்தோறும் காலையில் அவருடன் நானும் திரு. வி. க. அவர்களும் உலாவச் செல்லும் வழக்கத்தைக் கைக்கொண்டோம். உலாவி வரும்போது பிள்ளையவர்கள் பல அரிய கருத்துக்களை எனக்கு எடுத்துக்கூறி விளக்குவார்கள். 1907ல் ஒரு நாள் பிள்ளையவர்கள் என்னிடம் சபையில் நான் செய்துவந்த உபயங்களைப் பாராட்டி "நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும்" என்ற செய்யுளைக்கூறி அதன் கருத்தைச் சொல்லச் சொன்னார்கள். நான் அப்பாடலின் கருத்தைக் கூறியதும், அவர்கள் சபையில அங்கத்தவனானல் நல்

லோருடைய கூட்டுறவு ஏற்படுமே என்று அன்புடன் கூறினார்கள். ஆண்டவன் திருவுள்ளக் குறிப்பு அதுவெனக் கருதி, உடனே ஸ்ரீ பாலசுப்பிரமணிய சபையில் உறுப்பினராகச் சேர்ந்தேன். பிறகு சைவ சித்தாந்த மகா சமாஜத்திலும் உறுப்பினன் ஆனேன்.

பிள்ளையவர்களை நான் எனக்கு நல்வழி காட்டிய குருநாதராகவே கருதிவருகிறேன். அவர்கள் மூலமாகவே ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள், ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள், அருள்திரு மறைமலையடிகள் முதலான பெரியோர்களுடைய தொடர்பு ஏற்பட்டு, அப்பெரியார்களுக்குத் தொண்டுபுரியும் வாய்ப்பும் கிடைத்து, அவர்களுடைய நல்லாசிகளையும் பெற்றேன்.

பிள்ளையவர்கள் உள்ளூரிலும், வெளியூர்களிலும் சொற்பொழிவாற்றச் செல்லும்போது உடன்சென்று, அவர்களுடைய நல்லுரைகளைக் கேட்டு மகிழ்வேன். உத்தியோகத் துறையில் அவர்கள் வெளியூர்களுக்கு மாற்றப்பட்டபோதெல்லாம் ஆவினைப் பிரிந்த கன்றுபோல் வாடுவேன். அச்சமயங்களில் கடிதப் போக்குவரத்து மூலம் அவரது கருத்துக்களையும், அறவுரைகளையும் பெற்று ஆறுதலடைவேன். சபையில் தினசரி வழிபாட்டின்போதும, ஆண்டுவிழா, மற்றும் விசேட விழாக்களின்போதும உடனிருந்து இனிய மொழிகள் கூறி செயல்கள் செவ்வனே நடைபெறக் கவனித்துக்கொள்ளும்படி எனக்குப் புன்முறுவலுடன் கட்டளை இடுவார்கள். யானும் அவ்வாறே பணி செய்து மகிழ்வேன். 1932ல் என் மூத்த மகன் சண்முகம் நோய்வாய்ப்பட்டிருந்தபோது பிள்ளையவர்களும், அவர் குடும்பத்தினரும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்து செய்த உதவிகளை நாங்கள் என்றும் மறக்க முடியாது.

ஒழுக்கசீலரான பிள்ளையவர்கள் தான் பெற்ற இன்பம் மற்றையோரும பெறவேண்டும் என்னும் பேரன்பு பூண்டவர்கள். தாம மட்டும் நல்வழியில் ஒழுகினல் போதாது,

பிறரையும் நல்வழிப்படுத்தல் வேண்டும் என்னும் உயரிய கருத்துடன் தொண்டாற்றி வருபவர்கள். நீண்டநாளாக அவர்கள் பல பெரியார்களின் அரிய சொற்பொழிவுக் கருத்துக்களைக் கண்ணுங்கருத்துமாய் எடுத்துக் குறித்துவைத்துள்ளார்கள். அவைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் நூல் வடிவாக வெளியிட வேண்டுமென ஏறக்குறைய பதினைந்து வருடங்களாக நான் அவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் தாழ்மையோடு வேண்டியும் "எனக்கு அவற்றை ஒழுங்குபடுத்திப் பதிப்பிக்க நேரமில்லை" என்று கூறிவருவார்கள். இனியேனும் அவர்கள் அதற்கென ஆவன மேற்கொண்டு, அவற்றை வெளியிடத் திருவருள் துணை நிற்க வேண்டும்.

திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் செய்து வரும் தொண்டுகளில் தலைசிறந்தது சமயத்தொண்டாகும். மேனாடுகளிலிருந்து மதப்பிரச்சாரத்திற்கென இலட்சக் கணக்கில் நம் நாட்டுக்குப் பணம் அனுப்பப்பட்டு, மதப் பிரச்சாரம் செய்யப்பட்டதோடன்றி, கல்விச்சாலைகள், மருத்துவ மனைகள் முதலியன ஏற்படுத்தி, அவைகளின் மூலமாகக் கல்வி அறிவற்ற ஏழை எளியவர்களுக்கு—குறிப்பாகச் சேரிவாழ் மக்களுக்கு நமது இந்து மதத்தில் உள்ள தீண்டாமை முதலிய கொடுமைகளால் அவர்கள் என்றும் ஈடேறமுடியாது என்றும், கிறிஸ்து மதத்தில் சேர்ந்தால் தான் அவர்கள் உய்வடைய முடியுமென்றும் பலவாறு போதனை செய்து மதமாற்றம் செய்யப்பட்டுவருதலைக் கண்டு, திரு. பிள்ளையவர்கள், நம் மக்கள் இவ்வாறு கிறிஸ்துவர்களாகவும் முஸ்லீம்களாகவும் மதம்மாறிக்கொண்டிருந்தால், நாளடைவில் நமது இந்து சமயம் என்னாகும் என்று மனம் வருந்துவார்கள். நம் நாட்டிலுள்ள சமயப்பற்றுள்ள செல்வந்தர்களும், கல்விமான்களும் ஒன்று சேர்ந்து, இந்து சமயத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டியன செய்வது பற்றி சிந்திக்காமல் இருக்கிறார்களே என்று திரு. பிள்ளையவர்கள் தமது இருபது, இருபத்திரண்டாவது வயதிலேயே

எண்ணி வருந்தினார்கள். இத்துறையில் நாம் நமது கடமையைச் செய்வோம எனக்கருதி, தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களுடன் சேர்ந்து சென்னையிலும், சென்னைக்கு அருகிலுமிருந்த சேரிகளுக்குச் சென்று அங்கிருந்த மக்களுக்கு, அவர்கள் சுத்தமாய் இருக்கவேண்டியதன் அவசியம் பற்றியும், தினந்தோறும் தெய்வவழிபாட்டின் அவசியம் பற்றியும், உயிர்ப்பலி, தீண்டாமை ஆகியவைகளின் கொடுமைகள் பற்றியும் இடைவிடாது பிரசாரம் செய்தார்கள். மக்கள் சுத்தமாகவும், தெய்வ சிந்தனையோடும் இருப்பின் ஆலயங்களுக்குப்போய் வழிபடுவதற்குத் தடையிருக்க முடியாது என்றும் அம்மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

திரு. பிள்ளையவர்களும், திரு. வி. க. அவர்களும் இவ்வாறு சேரிகளுக்குப்போய் கல்வித் தொண்டும், சமயத் தொண்டும் செய்துவந்ததை அப்போதிருந்த மகா வித்துவான்களும் சைவ சித்தாந்த சாத்திர வல்லுனர்களும் வெறுத்தனர். இருவரும் நமது சமய சம்பிரதாயத்தைக் கெடுக்க வந்தவர்கள் என்று ஏசினர். இவ்வசைமொழிகளையெல்லாம் புன்முறுவலுடன் சகித்துக்கொண்டு, திரு. வி. கவுடன் திரு. பிள்ளை அவர்கள் அன்று ஆற்றத் தொடங்கிய தெய்வத் தொண்டு இன்று பலன் அளிக்கத் தொடங்கியுள்ளது.

சைவப் பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கல்வித்தொண்டும், சமயத்தொண்டும செய்ய அருள் புரிய வேண்டுமெனச் செந்திலாண்டவன் திருவடி மலரிணைகளைப் பிரார்த்திக்கின்றேன்.

# வார வழிபாட்டுத் தந்தை

(G. கலியாணம் M. A., D. Econ.)

இந்திய சுதந்திர நாளான 15-8-67 அன்று சைவப் பெரியார் உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் எண்பது ஆண்டு நிறைவெய்தியமை தெரிந்து பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாகச் சைவசமயத்தினரும் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்களைப் பற்றி யான் அறிந்தவற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அன்பர்களை ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் அழைத்துச் செல்கிறேன். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 7, 8-ஆம் ஆண்டு நிறைவுவிழா என்று எண்ணுகிறேன். திருப்பா திரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமை வகித் தார்கள். அப்போது எனக்கு 13 அல்லது 14 வயது இருக்கும். தஞ்சையில் என் உறவினர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். திருவையாற்றிலிருந்து எழுந்தருளிய சுவாமிகளைத் தஞ்சை நகர்ப்புறத்து எல்லையிலிருந்து ஊர்வ லமாகப் பல்லக்கில் அழைத்துவந்தபோது நானும் உடன் போந்தேன். ஆண்டு விழா மிகப் பெரிய கொட்டகையில் நிகழ்ந்தது. ஐயாயிரம் மக்கள் கூடியிருந்தனர். சுவாமி கள் தலைமை ஏற்றார்கள். பேரறிஞர்கள் பலர் பேசினார்கள். ஒருவர் எழுந்து கணீர் என்ற குரலில் பேசினார். கொட் டகை முழுவதும் அமைதி நிலவியது. ஒலிபெருக்கி இல் லாத காலம் அது. எப்பொருள்பற்றிப் பேசினார் என்பது பற்றி எனக்கு நினைவில்லை. பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் சுவாமிகள் மணி அடித்தார்கள். கூட்டத்தினர் அவரையே தொடர்ந்து இன்னும் கொஞ்ச நேரம் பேச அனுமதிக்கும்படி வேண்டினர். சுவாமிகளும் அருள் கூர்ந்தார்கள். அப்படிப் பேசியவர் யார் என்று தெரிந்துகொள்ள என் இளமை உள்ளம் துடித்தது. என் உறவினரைக் கேட்டேன். சொற்பொழிவாற்றியவர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை என்று எனக்கு அவர் தெரிவித்தார். உயரமான உருவம்; காதில் கடுக்கன்கள்; வெள்ளை வேட்டிப்

பஞ்சகச்சம்; கறுப்பு மேற்சட்டை; வெள்ளைத் தலைப்பாகை; நெற்றியில் திருநீறு, சந்தனப்பொட்டு; இளமைக்கோலம். இந்தக்காட்சி இன்றும் என் மனக்கண் முன் நிற்கிறது.

பின்னர் 1920 ஆம் ஆண்டு சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழா என் ஊராகிய மாயூரத்தில் தருமபுர ஆதீனத்தில் அப்போதிருந்த மகா சந்நிதானத்தின் ஆதரவில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த என்னை சமாஜ ஆண்டு விழாவில் தொண்டர்படைத் தலைவனாகப் பணிபுரியுமாறு எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் அனுப்பி வைத்தார். பல பெரியோர்கள் பேச்சுக்களைக் கேட்கும் பேறுபெற்றேன். திரு. ச. ச. பிள்ளை அவர்களின் சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் எதைப்பற்றிப் பேசினார்கள் என்பது எனக்கு நினைவில்லை.

பின்னர் பத்து ஆண்டுகள் கழிந்து, கல்லூரிப்படிப்பு முடிந்து சென்னை நில வருவாய்த்துறைத்தலைமை அலுவலகத்தில் எழுத்தனாக வேலைக்கு அமர்ந்தேன். 1930 ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் சமாஜ ஆண்டு விழா மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மூன்று நாட்களும் சென்று சொற்பொழிவுகளைச் செவிமடுத்தேன். ஒரு நாள் தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் "இமயமலை" என்னும் பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றினார்கள். [அது இமயமலை அல்லது தியானம் என்ற பெயரில் பின்னர் நூலாக வெளிவந்தது]. அதைத் தொடர்ந்து பேசியவர்கள் திரு சச்சிதானந்தம் பிள்ளையவர்கள். தலைப்பு "ஈதென்ன புதுமை" என்பது. இமயமலைச் சாரலிலிருந்து புறப்பட்டுத் தென்னாட்டுக்கு வந்த ஆதிநாதர், உலோக சஞ்சாரர் என்ற இருவரும் சயய நிலை

யங்கள், மடங்கள், கோயில்கள், சைவ சமயிகள் முதலியோரிடமுள்ள குறைபாடுகள், ஊழல்கள், ஒழுக்கக்கேடுகள் முதலியவற்றைப் பார்த்து மனம் வருந்தி உரையாடிக்கொண்ட கனவுலகக் கற்பனையாக அமைந்தது அப்பேச்சு. அதைப்பற்றிப் பண்டிதமணியவர்கள் மிகவும பாராட்டிப் பேசினார்கள்.

1930 ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சிகளும், சிறப்பாக திரு ச. ச. பிள்ளையவர்களின் பேச்சும் என்னை சமாஜத்திற்கு ஈர்த்தது. அதுமுதற் சமாஜத்தின் அங்கத்தினன் ஆனேன். சமாஜத்தில் திரு. பிள்ளை அவர்களுடன் உதவிச் செயலாளனாகவும், 'சித்தாந்தம்' உதவிப்பத்திராசிரியனாகவும் பணிபுரிந்தேன். மேலும் திரு வி. க. சகோதரர்கள் தோற்றிப் பேணிவளர்த்த இராயப்பேட்டை. ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தஜன சபையின் செயலாளனாகத் தொண்டாற்றினேன். அந்த சபைக்கும் திரு. பிள்ளையவர்கள் தலைவராக இருந்தார்கள். ஆகவே 1930 முதல் 1942 வரையில் திரு. பிள்ளையவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதன பின்னர் சென்னையை விட்டு வேலை குறித்து வெளியூருக்கு வந்துவிட்டபோதிலும் சமாஜ ஆண்டு விழாக்களிலும் வேறு சமயக் கூட்டங்களிலும் அவர் உடன் உறைந்து பயன்பெற்றதை யான் என்றும் மறக்க முடியாது. நூற்றுக்கணக்கான அவர்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்டின்புற்றவர்களில் அடியேனும் ஒருவன் என்பதைப் பெருமிதத்துடன் கூறுகிறேன்.

திரு. பிள்ளையவர்கள் பேச்சுக்களின் சாரம் சைவசமயிகள் தற்கால நாகரிகத்தில் ஈடுபட்டு சமயத்தைப் புறக்கணித்து வாழும் நிலையைப்பற்றி மனங்கவன்று அவர்களைத் திருத்துவதாகவே இருக்கும். கிறித்தவர்கள் மாதா கோயிலுக்கு வாரம்ஒரு முறை போகின்றனர்; மகம்மதியர் நாள் தோறும தொழுகின்றனர்; ஆனால் சைவ சமயத்தினர் ஒரு குறிப்பிட்ட நாளிலேனும் ஆலயம் செல்லவில்லையே என்று

மனம் புண்பட்டு வாரம் ஒருநாளாவது வழிபாடு செய்யவேண்டும் என்று எங்கும் பிரச்சாரம் செய்தார்கள். பல வார வழிபாட்டுக் கழகங்களை நிறுவினார்கள்; வழிபாட்டு முறைகளையும் வகுத்துத்தந்தார்கள். இப்போது தமிழ் நாட்டில் அந்த இயக்கம் பரவி இருக்கின்றது. பல ஊர்களில் வார வழிபாட்டுக் கழகங்கள் சிறந்த முறையில் பணிஆற்றி வருகின்றன. ஆகவே திரு. பிள்ளை அவர்களே வார வழிபாட்டுத் தந்தையாவார்கள். காலஞ்சென்ற பேரன்பர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பிள்ளை அவர்களைச் "சைவப் பாதிரியார்" என்று அழைத்து மகிழ்வாராயினர்.

திரு. பிள்ளையவர்களின் சீரிய ஒழுக்கம், இனிய சொல், சைவ சமயப்பற்று, இடையறாத்தொண்டு, சமயப் பேச்சுத் திண்மை, இடித்துரைக்கும் வன்கண்மை, தூய உள்ளம், எளிய வாழ்க்கை, தன்னலங்கருதாமை, சமய நூலறிவு, பரந்த உலகஞானம், உயர்ந்த பண்பாடு முதலியவற்றை எல்லோரும் பின்பற்றவேண்டும். அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை 'சித்தாந்த' இதழில் வெளியிடுமாறு அவர்களைப பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். பல அன்பர்களும் அதேபோல் விழைவார்கள் என்று எண்ணுகிறேன்.

திரு. பிள்ளை அவர்கள் இன்னும் பல யாண்டுகள் நம்மிடை வதிந்து சமயத்தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிய அவன் திருவடிகளை வாழ்த்தி வணங்கி வழிபடுவோமாக!

# சைவப் பெரியாரைப் பற்றிச் சில சிந்தனைகள்

கொ. நீ. சிங்காரவேலு எம். ஏ,

சைவப் பெரியார் திரு பிள்ளை அவர்களுக்கு எண்பதாண்டு நிறை வெய்தியது குறித்துச்சைவ உலகம் மகிழ்ச்சி

எய்தி இறைவனுக்கு நன்றி செலுத்துகிறது. அவரைக் காணுந்தோறும் நாம் சைவத்தின் திருவுருவத்தை, சைவக் குணக்குன்றைப் பார்ப்பதாகவே எண்ணி உள்ளங்குளிர் கின்றோம். அவர் இரண்டு தலைமுறைக்குப் பாலமாக அமைந்துள்ளார். திரு வி. க. தலைமுறையின் தனிப்பெரும் பிரதிநிதியாக நமக்குக் காட்சியளிக்கிறார்.

2. சாதனைகள்:—

அவர் செய்த சாதனைகள் பல. தமிழ் நாட்டில் நாத் திகப் பிரசாரம் தீவிரமாயிருந்த காலத்தில், அவரும் திரு. வி. க. அவர்களும் சைவத்தை விஞ்ஞான அடிப் படையில் விளக்கிப் பகுத்தறிவுக்கு முதன்மைதந்து இளைஞர்களும் ஏற்கும் வண்ணம் பரப்பினார்கள். அவர் வார வழிபாடு என்ற முறையினை மக்களிடம் பரப்பி சைவத் திற்கு மறுமலர்ச்சி தந்தார். (வார வழிபாட்டுள், காலையில் ஒவ்வொரு குடும்பமும், திரு க. இராமநாதன் செட்டியார் அவர்களால் பரப்பிவந்த குடும்பக் கூட்டு வழிபாட்டுச் செயல்தற் காலத்திற்கேற்ற வழிபாட்டு முறையாக அமையும் என்றும் கருதுகிறேன்.)

3. புகழ்:—

மனிதனின் ஆசைகளை இரண்டாகப் பிரிப்பார்கள். ஒன்று மண்ணாசை அல்லது பொருளாசை; மற்றொன்று பெண்ணாசை. "ஒருவனை இவ்விரண்டு உரைகற்களால் சோதிக்காத முன்பு அவனைப் பற்றி அபிப்பிராயம் கூற முடியாது" என்று பர்நாட்ஷா என்ற ஆங்கில ஆசிரியர் கூறிப் போந்தார். ஆனால், கற்றோர்களிடையே மற்றொரு ஆசை உண்டு. அதுதான் புகழாசை. பதவியாசை புகழாசையில் அடங்கும். இவ்வாசை பலதிறப்பட்ட நுட்ப உருவங்களைக் கொண்டு நம்மையும் அறியாமல் நம்மைப் பீடிக்கும். திருவள்ளுவர் 'புகழ்' என்ற அதிகாரத்தை இல்லற வியலின் இறுதியில் வைத்து இல்லறத்தின் பயனே புகழ் என்பதுபடக் கூறியுள்ளார். ஆனால், புகழ் தானாக வருவது ஒன்றல்லாமல் நாமாக நாடிச் சென்று அடையும்

பான்மையது அன்று. இக்கருத்தை இவ்வதிகாரத்தில் பரிமேலழகர் பலயிடங்களில் குறிப்பாக உணர்த்தியுள்ளார். இவ்வதிகாரத்தின் முன்னுரையில் அவர் "அஃதாவது, இல்வாழ்க்கை முதல் ஈகையீருகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனுகி இவ்வுலகின் கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது பெரும்பான்மையும் ஈதல் பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது." என்று கூறியுள்ளார். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் தொடருக்குப் பொருளெழுதுகையில், பரிமேலழகர் 'புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க' என்று கூறியுள்ளார். ஆகையால், நாம் விரும்பி நாடவேண்டியன நற்குணங்களும் நற்செய்கைகளுமே தவிர புகழன்று. "மக்களால் போற்றப் பெருத பொன்னும், மணியும், மலரும் உலகில் எத்தனையோ உள்ளன" என்று ஓர் ஆங்கிலக் கவி கூறியிருப்பது யாவரும் அறிந்ததே.

புகழே குறிக்கோளாகக் கொள்கிறவர்கள் பல குறுக்கு வழிகளை நாடிச் செல்கிருர்கள். அவைகளால் வருங் குற்றங்களாவன, தன்னையே வியத்தல், புறங்கூறுதல், பிறர் குற்றங் காணுதல் 'மனக்கெழீஇ மன்றிற் பழித்தல்' முதலியன. இக்குறைகளைக் கடந்தவர் நமது சைவப் பெரியார். அவர் அடைந்த புகழ் 'நாடா நல்லிசை'

4. தொண்டு.

பொதுப் பணியில் ஈடுபடுகிறவர்கள் பலவிதம்,

ஒரு சாரார் சுயநலத்திற்காகவே பொதுப்பணியில் ஈடுபடுகிறவர்கள். இவர்கள் அதமர்கள். இவர்களைப் பற்றிப் பேச்சு வேண்டாம்.

மற்றெரு சாரார் சிறிது காலம் பொதுத் தொண்டு செய்து சலித்துப் போய் எல்லாம் யோசிக்கும் வேளையில் உண்ணுவதும், உறங்குவதுமாக முடியும் என்ற மனநிலையுடன் ஒதுங்கி விடுகிறவர்கள்,

மூன்ருவது சாரார் பொதுத் தொண்டு செய்கையில், மற்றவர் தங்கள் திறமையைப் போதுமான அளவு அறிந்து பயன்படுத்திக் கொள்ளவில்லேயே என்று மனமுடைந்து மற்றவர்களே நிந்திப்பவர்கள்.

நான்காவது சாரார், சில காலம் தொண்டு செய்து, தங்களேத் தவிர மற்றவர்களெல்லாம் போலித் தொண்டர்கள் சுயநலவாதிகள், என்ற முடிவுக்கு வந்து ஒதுங்கு கிறவர்கள்.

ஒரு சிலரே தங்கள் அறிவாற்றல்களேப் பற்றியோ, சீலத்தைப் பற்றியோ, ஒரு சிறிதும் நினைப்பின்றி, பொதுத் தொண்டு தங்கள் இயற்கை நியதி என்று கொண்டு, மற்ற வர்கள் குணங்களேயே பாராட்டி, அவர்கள் குற்றங்களே அறியாதவர்களாய், இடையீடின்றி பொதுத் தொண்டில் ஈடுபடுகிறவர்கள். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது தான் இவர்கள் குறிக்கோளும் செயல்முறையும் ஆகும். இச்சிறுபான்மைப் பெருந்தகையார் கூட்டத்தைச் சேர்ந்தவர் நமது சைவப் பெரியார்.

பொதுத் தொண்டும் தன்முனைப் பில்லார்க்கே ஆகும்,
அவம் அதனே மற்றையார் மேற்கொள்வது.

5. ஆர்வம்.

ஒருநாள் நானும் இன்னும் சிலரும் சைவப் பெரியா ரோடு பேசிக் கொண்டிருந்தோம். அப்போது, திரு ரா. காசி நாததுரை. எம். பி, அவர்கள் வந்து சேர்ந்தார். அராஜகம், கொடுமை, வஞ்சகம் முதலியன பல்கி மக்கள் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பற்றி சைவப் பெரியார் வருந்திப் பேசி, நாமெல்லாம் ஒன்றுகூடி, இந்தப் போக்கை மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து நம்மால் ஆனதைச் செய்ய வேண்டாமா என்று உணர்ச்சியோடு கூறினர். திரு காசிநாததுரை அவர்கள் வியப்படைந்து "ஆஹா, இந்த வயதில் என்ன உணர்ச்சி?

என்ன ஆர்வம்? இதுவன்றோ தங்கள் தனிச் சிறப்பு!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினர்.

உலகில் கற்றோர்கள் இரண்டுவிதம். ஒருசாரார் வெறும் அறிவு கொண்டு உலகை ஆராய்ந்து, இருக்கும் நிலையையும் போகும் போக்கையும் விளக்கித் தேவையானல் சில அறவுரைகளையும் கூறி அத்துடன் அமைவார்கள். இவர்கள் சிந்தனையாளர்கள். மற்றொரு சாரார் உலகின் சிறுமை கண்டு பொங்கி, அதன் போக்கையே மாற்ற முயல்வார்கள். இவர்கள் செயல் வீரர்கள். மஹாத்மா காந்தி, பாரதியார் போன்றவர்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களால் தாம் சமுதாயத்தில் மாறுதல் ஏற்பட முடியும். நமது சைவப் பெரியாரும் இத்திருக் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

சைவப் பெரியார் அவர்களுக்கு நம் நாட்டில் நிகழும் இரண்டு செய்திகள் மிக்க வருத்தம் தருகின்றன. அவைகளைப் பற்றிப் பேசும்போது அவர் உணர்ச்சிவயப் படுகிறார் ஒன்று, சினிமாப் படக்காட்சிகளின் தற்கால ஆபாசப் போக்கு இளைஞர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு உயர்ந்த குறிக் கோள் இவைகளைப் பாழ்படுத்துகின்றன என்பது. மற்றொன்று, இப்போதும், பலர் இந்து மதத்திலிருந்து வேற்று மதத்திற்கு மாற்றப் படுகின்றார்கள்; இதற்குத் தக்க மாற்று நடவடிக்கை எடுக்கா விட்டால், இந்து மதத்தினரின் எண்ணிக்கை மிகக் குறைந்து விடும் என்பது. இக் கருத்துக்கள் முற்றிலும் உண்மையாயினும் மற்ற தலைவர்கள் இதில் தேவையான ஆர்வமோ, அக்கரையோ காட்டாதது வருந்துதற் குரியது.

நமது சைவப் பெரியார் போன்ற,

" தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே
உண்டால் அம்ம இவ்வுலகம்."

# சச்சிதாநந்தத்தைப்

# போற்ருதார் யாரே!

R. கோவிந்தராஜன் B. A.

**1913** ஆம் ஆண்டு அடியேன் செங்கற்பட்டில் அக்கால W. F. C. M. உயர் தரப் பள்ளியிலிருந்து S. S. L. C. பரிட்சையில் தேறினேன். கல்லூரியில் சேர்ந்து மேலும் படிக்க வேண்டும் என்பது என் அவா. அஞ்ஞான்று உயர் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் சென்னை இராயப்பேட்டை வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் தருக்க சாத்திர விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார். அக்காலத் தமிழறிஞரும் சைவ சமயத் தொண்டருமான என் மைத்துனர் காலஞ் சென்ற சோமங்கலம் சீனிவாசம் பிள்ளையவர்கள் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்களின் நெருங்கிய நண்பர். நான் முன்னவரின் பரிந்துரைக் கடிதம் ஒன்றைப் பெற்று பிள்ளையவர்களை வெஸ்லி கல்லூரியில் காணச் சென்றேன். அப்பெரியார் ஒரு வகுப்பில் தம் விரிவுரையை முடித்துக் கொண்டு கல்லூரி மாளிகையை விட்டுக் கீழிறங்கி வரும் நேரத்தில் நான் கொண்டு சென்ற கடிதத்தை அவர் கையில் நீட்டினேன். அது தான் அப்பெரியாரை நான் முதன் முதலாகச் சந்தித்த காலம். நான் நீட்டிய கடிதத்தைப் படித்துக் கொண்டே என்னையும் அழைத்துக் கொண்டு அக்கல்லூரி முதல்வர் (C. Pallard) சி. பாலர்ட் துரையிடஞ் சென்று அவரிடம் அக்கடிதத்தைக் கொடுத்து என்னைக் காட்டி ஏதோ சில சொற்களைச் சொன்ஞர். உடனே அம் முதல்வர் என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் (Come with fees tomorrow) கட்டணத்துடன் நாளை வாவென்ருர். குதூகலத்துடன் அன்று நான் வீடு திரும்பினேன். ஆனல் வசதிக் குறைவால் நான் அவ்வாண்டு அக் கல்லூரியில் சேர இயலவில்லை. அடுத்த ஆண்டு (1914) நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து படித்து B. A. பட்டம் பெற்றேன். கல்வி கற்கும் ஆர்வமுடைய இளைஞருக்குத் துணை

செய்வதில் உயர் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் காட்டிய ஊக்க மிகுதிக்கு மேற்கூறிய என் முதற் சந்திப்பு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அச்சம்பவம் பிள்ளையவர்களின் நினைவில் இருக்கு மென்று நான் நம்புகிறேன்.

பிள்ளையவர்கள் சைவ சமயச் சீர்திருத்தக் கொள்கையுடையவர். அவருடைய சொற் பொழிவுகளை நான் செங்கற்பட்டிலும் காஞ்சியிலும், திருக்கழுக்குன்றத்திலும் பல முறை கேட்டிருக்கிறேன். சைவ சமய இலக்கிய இலக்கணங்களின் பொருள் கூறி மக்களின் ஒழுகலாறுகளைத் திருத்தி, இறை வழிபாட்டில், செயல்முறையில், அவர்களை ஊக்குவித்தலே சாலச் சிறந்ததெனக் கருதி வார வழிபாடு, கூட்டு வழிபாடாகிய புது வழிகளை அவர் ஆங்காங்கே போதித்து வந்தார். அப்பெரியாருடன் தொடர்பு கொண்ட சைவ அன்பர்கள் அவரைச் சைவ சமயப் பாதிரியார் (Missionary என்று கூடத் தமக்குள் வேடிக்கையாகப் பேசிக் கொள்வதுண்டு. அவர் பேச்சில் சொற்சுவை, பொருட்சுவை, நகைச்சுவை யாகிய அனைத்தும் பொருந்தியிருக்கும்.

சைவப் பெரியார் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் திருநீறணிவதில் ஆழ்ந்த பற்றுடையவர். அவர் செங்கற்பட்டு மாவட்டக் கல்வியதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில, அவ்வூரில் நான் படித்த, மேற் கூறிய உயர்தரப்பள்ளியின் (The then re-named st. Columba's high school) மாணவர் மன்றத்தில் அவர் தம் சொற்பொழிவைக் கேட்க அம் மன்றத்திற்கு நானும் சென்றிருந்தேன். அவர் தம் சொற் பொழிவைத் தொடங்குவதற்கு முன், மாணவர் கூட்டத்திற்கெதிரில் மேடைமீது நின்று, திருநீற்றுப் பையைத் திறந்து அதனுள்ளிருந்த திருநீற்றை எடுத்துச் 'சிவா' வென்று சொல்லித் தம் நெற்றியிலணிந்து கொண்டதைக் கண்டு மாணவர்கள் (நானுங்கூட) வியந்ததை நான் அறிவேன். அத்தகைய செயல்களால் அப் பெரியார் இளைஞர் தம் சமய ஒழுகலாறுகளுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார். "அண்ணல் திருநீறு செம்மை

திடமே" என்ற திருஞான சம்பந்தரின் சொற்களைத் தம் வாழ்க்கையில் மெய்ப்பிக்க முயன்ற பெரியார் பிள்ளையவர்களாவார்.

கல்வித் துறையில் அப்பெரியார் மேற்கொண்ட தொழில்களில் மிகமிக நேர்மையுடன் பணி புரிந்தவரென்பதை நான் என் நண்பர்கள் வாயிலாகக் கேள்வியுற்றிருக்கிறேன். சட்ட விதிவிலக்குகளில் பிள்ளையவர்கள் ஆழ்ந்த பற்றுடையவர். அவற்றிற்கு மாறாக எந்தச் செயலையும் செய்யத் துணியார் அப் பெரியார்.

" இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாக
செப்பமும் நாணும் ஒருங்கு"

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு அவர் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்கினர்.

பிள்ளையவர்கள் திறந்த உள்ளம் படைத்தவர். கல்வியதிகாரியாக அவர் செங்கற்பட்டில் முகாம் செய்திருந்த ஒரு சமயம் அவரை நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்தருணம் அவர் தம் குடும்பச் சிக்கல்களைப் பற்றி என்னிடம் ஒளிவு மறைவின்றிப் பேசியதை நான் மறவேன். சமயச் சார்பாக அவர் பிறருடன் உரையாடும் பொழுதும் தம் கருத்தை வெளிப்படையாகச் சொல்லும் துணிவு அவருக்கியல்பாக அமைந்துளது.

என்னை உள்ளிட்ட பல அன்பர்கள் அப் பெரியாரைச் சந்திக்கும் போதெல்லாம் அவர்காட்டும் நகை முகமும், பேசும் இன்சொல்லும் அவரைச் சச்சிதானந்த மென்றே நாங்கள் கருதக் காரணமாய் நின்றன வெனக் கூறி நான் இவ்வுரையை முடித்துக் கொள்கிறேன்.

# என் ஆசிரியர்

## (சேலம் அருட்கவி வெற்றிவேல் வேங்கடேசன்)

மாண்புமிகு சைவ சமயப் பெரியார் திரு. சச்சிதாநந்தம் பிள்ளை B. A. L. T. அவர்களின் சைவ சமயப்பற்று ஆர்கலியைவிட ஆழமுடைத்து எனக்கூறலாம். எங்ஙனமெனின்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்"
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்ற ஆன்ருேர் கருத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஞானப்பிழம்பாகிய அன்புரு பெற்றுள்ள அருமை பெருமை மிக்க நம் சைவப் பெரியார் திரு சச்சிதாநந்தம் பிள்ளை அவர்களேயாவர் என்பதைத் திண்ணமாகக் கூறலாம். இத்தகைய சான்ருேரின் மாணவனுக 1920 வது ஆண்டு முதல் 1922 வது ஆண்டுவரை இருந்த பாக்கியத்தை நான் பெற்றேன் என்று பெருமையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அஞ்ஞான்று இவர்கள் சேலம் போதனு முறைப்பள்ளியின் ஆசிரியராகப் பணியுரிந்தார்கள். அவ்வமயம் இவர்கள் கொண்டிருந்த சமயப்பற்றும், தமிழ்ப் பற்றும் யாவரும் கண்டு வியக்கும்படி மிகமிக உன்னத நிலையில் இருந்தன. இவர்கள் பாடம் கற்பிக்கும்முன் பள்ளி மாணவர்களிடத்தில் தாயன்பு கொண்டு ஒழுக்கம், பக்தி, வைராக்கியம், சமயப்பற்று இவைகளுக்கே முதலிடம் கொடுத்துப் போதித்து வந்தார்கள். இப்பெரியாரின் போதனையைக் கேட்ட பல மாணவர்கள் புலால் உண்பதை அறவே வெறுத்துத் தள்ளினர் என்ருல் இவர் போதனையின் சிறப்பு எத்தன்மைத்து என்பதை எடுத்தியம்பவும் வேண்டுமோ? சொல்நயம் பொருள்நயம் தோன்ற அக்காலத்தில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் எண்ணிலடங்கா. மேலும் ஆங்கிலப்பேச்சாளர்களின் சொற்பொழிவுகளை எட்டுணையும் விடாமல் தமிழ்ப்படுத்தி மக்களுக்கு விளக்குவதில் ஈடிணை

யற்றவர் என்னும் நற்பெயர் பெற்றிருந்தார். மாணவர்கள் இவர் கொண்டிருந்த பெருந்தன்மையையும் கண்ணியத்தை யும் கண்டு அடக்க ஒடுக்கமுடன் இவரிடத்தில் அளவிலா அன்பு காட்டி மிக்க பயபக்தியுடன் நடந்துவந்தார்கள். எங்களுக்குத்தமிழ் ஆர்வத்தை ஊட்டி இலக்கணங்களை இவர் திறமையுடன் போதித்ததின் பயனாக நான் தமிழில் பாக்க ளியற்றும் ஆற்றலையடைந்தேன். நான பிறவியில் வைண வனாயினும் சைவப்பற்றையும் சமரச சன்மார்க்கத்தையும் எனக்குப் போதித்தவர் எனது குருநாதர் சச்சிதாநந்தம் பிள்ளையவர்களேயாவர். ஆதலால் நான் இயற்றியுள்ள நூல்களை அவர் பாதகாணிக்கையாக அர்ப்பணிக்கக் கருது கிறேன். பண்டைய நாளில் ஏகலைவன் துரோணரை உள் ளத்தில் ஆசிரியராகக் கொண்டு வில்வித்தையனைத்தையும் கற்றவாறே என் உள்ளத்தில் என் அன்பார்ந்த ஆசிரியர் சச்சிதாநந்தம் பிள்ளையவர்களின் உன்னத உருவைப்பதித் துக்கொண்டே வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலிய எல்லாப்பாக்களையும் பாவினங்களையும் இயற்றும் வல்லமையைப் பெற்றுள்ளேன். என் நூல்களில் எல்லாப் பாவினங்களும் வந்துள்ளன. மேலும் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்னும் வள்ளு வப்பெருமானின் வாய்மொழிப்படி பிறவிக்கடலை நான் நீந்து வதற்கு அரிய புணையாகவும் என் குருநாதர் பிள்ளையவர்கள் துணை புரிந்தார்கள். அவரைப் போன்றே எங்களையும் காலை யும் மாலையும் தவறுமல் இறைவணக்கம் புரியும்படி கட்டளை யிட்டு வந்தார். அவர் கூறிய அன்றுமுதல் இன்றுவரை அப்பழக்கத்தை மேற்கொண்டதுடன் சதாகாலமும் உள் ளத்தில் உறையும் உன்னத பரம்பொருளை உன்னிக் கொண்டே இருக்கிறேன். அவரைப்பற்றி எழுத எண்ணி ஞல் ஒரு நூலே இயற்றிவிடலாம். அவர் வரலாறு சுருக்க மாக இருக்கவேண்டுமெனக் குறிப்புக்கொடுத்திருந்தபடி யால் சுருங்கக்கூற முற்பட்டேன். அவரின் எண்பதாண்டு நிறைவுவிழா நடந்ததையறிந்து சித்தம்மகிழ்வெய்தினேன். பொறுமையின் பொக்கிஷமாகிய அவர் இன்னும் பல்லாண்டு நீடுழிவாழ்ந்து சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் தொண் டாற்றும் வல்லமையை ஈந்தருளும்படி எல்லாம்வல்ல இறை வனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

# யான் கண்ட பெரியார்

(சைவப்புலவர் வித்துவான் சி. குமரேச பிள்ளை,
நாகர்கோவில்)

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 58-வது ஆண்டு விழா புதுவையில் நடந்தேறியது. அவ்விழாவின் மூன்றும் நாள் அடியேனது சொற்பொழிவு "சைவ சமய மாண்பு" எனும் பொருள்பற்றி யமைந்திருந்தது. யான் சமாஜ அன்பர்களுக்கும் புதுவைக்கும் அன்று புதியவனுயிருந்த படியால் யாரோடும் நெருங்கி உறவாடும் வாய்ப்பு எனது சொற்பொழிவு முடியும்வரை வாய்த்திலது. யான் சொற்பொழிவினை முடித்து மேடையினின்றும் இறங்கும் சமயம் அவ்விடத்து அமர்ந்திருந்த பெரியார் ஒருவர் முகத்தானமர்ந்து இனிது நோக்கி அகத்தானும் இன்சொலால் 'வருக'என அழைத்து அருகிலிருக்கப்பணித்தார். கைகூப்பி வணங்கியவாறே அருகமர்ந்தேன். அப்பெரியார் புன்முறுவலோடு எனை நோக்கி, நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சாத்திரக் கருத்துக்களால் அரண் செய்து விளக்கு முறை மிக நன்று. இத்துறையில் மேலும் முயன்றுவருக' எனப் பாராட்டிக் கூறி எளியேன் தொண்டிற்கு ஊக்கம் தந்தார்கள். யார் அப்பெரியார்? யாரென்றறியாத என்னை அன்புடனழைத்து அருகமர்த்தி ஆதரவுமொழி பகர்ந்த அப்பெரியார் யார்? என அறிய என்னுள்ளம் அவாவுற்றது. முகத்தைப் பயபக்தியுணர்வோடு உற்று நோக்கினேன். தோற்றத்திலே திரு. வி. க. அவர்களின் பொலிவு காணப்பட்டது. தமிழ்த் தென்றல் அகன்ற நெற்றியின் சுருக்கங்களிடையே தவழ்ந்துகொண்டிருந்தது. அகத்தூறிய சைவ ஒழுக்கம் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அன்பின் பெருக்கு வெண்பற்களினூடே ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. வெளிவரும் சொற்களோ, பண்பாட்டிற்கும் சைவ நெறிக்கும் திறவுகோலாயிருந்தன. அன்பும் பண்பும் அறிவும் கலந்துவரும் அச்சொற்பொருளிலே ஈடுபட்டு அசைவற்றிருந்தேன். எனினும் யார் அவர்! யார் அவர்? எனும் வினு என்னுள்ளத்து எழுந்துகொண்டேயிருந்தது.

ஆம்! அவர்களேதான். நான் நாகர் கோவிலிலிருந்து புதுவைக்குப் புறப்படுங்கால், நாகர் கோவில் நன்னெறி மன்றத் தலைவர் சித்தாந்தக்காவலர், சிவத்திரு—வள்ளிநாயகம் பிள்ளையவர்கள் என்னை நோக்கி, "நீங்கள் புதுவை மாநாட்டில் கண்டு வணங்கி ஆசிபெறவேண்டிய ஒரு பெரியார், சிவத்திரு. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் ஆவர் அவர்கள் சமாஜத்திற்கு அரும் பணியாற்றுதல் மூலமாகச் சைவத்தொண்டாற்றி வருபவர்; ஒழுக்கசீலர்; தருமசிந்தையுள்ளவர். அவர்களுக்கு என் வணக்கத்தையும் தெரிவியுங்கள்" எனக்கூறியனுப்பியிருந்தார்கள். அவர்கள் சொல்லுருவாய்த்தந்த திருவுருவம் என்கண்முன் காட்சியளிக்கும் சிவப்பழமே யெனத்தெளிந்தேன். தேடவேண்டிய செல்வம் தேடிவந்த சிறப்பை யெண்ணி வியந்தேன். என் கைகள் என்னையறியாமலே மீண்டும் குவிந்தன. இப்பொழுது எனக்கு அவர் சத்சித் ஆனந்தமாகவே காட்சி தந்தார்கள், உள்ளத்திலேயே உண்மை நெறி கண்களில் மிளிர, அறிவொளி முகத்தில் பொலிய, ஆனந்தம் அதரங்களினூடே களிநடம் புரிய சத்சித் ஆனந்தமாய் அவர்கள் அன்று தந்த காட்சி இன்றும் என்னுள்ளத்தில் நீங்காத காட்சியாக இருக்கிறது. சைவ ஒழுக்கத்திற்கும், பயன்கருதாத சமயத்தொண்டிற்கும், பக்திப் பெருக்கிற்கும், சான்ருகத்திகழும் அப்பெரியாரை நினைந்து இன்றும் என்னுள்ளம் இன்பநிலை எய்துகின்றது. சைவம் தழைக்க வாழ்க சச்சிதாநந்தம்.

அம்மையும் அப்பனும் ஆகும் பரம்பொருளைச்
செம்மையுறப் போற்றும் சிறப்பினுல்—இம்மையே
சைவம் சிறப்பிக்கும் சீர்சத்சித் ஆனந்தன்
வையத்து வாழ்கவினிதே.
எண்பதின் மேலாக எண்ணரிய யாண்டுகள்
நண்ணியே வாழ்ந்து நலம்பலவும்—பண்ணிதான்
மண்ணுலகில் மாண்புபல மங்காது செய்துநீர்
திண்ணமுற வாழ்கவினி தே.

திருச்சிற்றம்பலம்.

# சைவப் பெரியார்

## ( துணையாசிரியர் )

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் நம் சமாஜ ஆக்கத்தில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள். சமாஜத்திற்கு அவர்கள் செயலாளர், பத்திராசிரியர், தலைவர் முதலிய பல்வேறு நிலையிலும் அவ்வக்காலங்களில் பணியாற்றி அதன் ஏற்றத்தைக் கண்டு மகிழ்ந்து வருகிறார்கள். சமாஜம் 1905 ல் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் முறைப்படி 1915 ஆம் ஆண்டுதான் அரசியலாரால் பதிவு செய்யப் பெற்றது. அவ்வாறு பதிவுசெய்யப் பெற ஆவணப்பதிவாளருக்குத் தமிழ் நாட்டில் அக்காலத்தில் தலைமைசான்ற சமயத்தலைவர்களாயிருந்த முப்பதின்மர் கையெழுத்திட்டு மனுச்செய்தனர். அவ்வாறு கையெழுத்திட்டவர்களுள் இன்று நம் முன் உயிரோடு நிலவி வரும் ஒப்பற்ற பெரியார் நம் பிள்ளையவர்களேயாவார். மற்றையோர் யாவரும் மேலுலகிலிருந்துகொண்டு நம் சமாஜ ஏற்றத்துக்கு ஆசி வழங்கி வருகின்றனர். ஆகவே நம் சமாஜத் தோற்றம் முதற்கொண்டு அதனைக் கட்டிக் காத்து வளர்த்த பெருமை நம் பிள்ளையவர்களையே சாரும். அவர்களுக்கு எண்பதாண்டு நிறைவுவிழா நிகழ்வது நம் சமாஜத்திற்குரிய சிறப்பு விழா என்பதில் எட்டுணையுமையமின்று. அதனாலேயே பல தாபனங்கள் நடத்தும் விழாக்களில் எல்லாம் நம் சமாஜமும் பங்கு கொண்டு மகிழ்ந்ததோடன்றி இம்மாத நம் சித்தாந்த இதழையே சதாபிடேக மலராக வெளியிட சமாஜச் செயற்குழுவினர் கருதினர். அதன்படி இந்நன்னாளில் இம்மலர் உங்கள் திருக்கைகளில் மலர்கின்றது.

நம் பிள்ளையவர்களின் 81 ஆண்டு அப்பர் பெருமானின் வயதினை ஞாபகப்படுத்துவதாலும் தொண்டுக்குரிய சின்னமாக அப்பர் சுவாமிகள் விளங்குவது போன்று நம் பிள்ளையவர்களும் விளங்குவதாலும் அவர்கள் சதாபிடேக விழா நினைவாக 81000 வெண்பொற் காசுகள் வசூல் செய்து அப்பர் சுவாமிகளின் பெயரால் சைவத் தமிழ்

வளர்ச்சிக்குப் பயன்படுத்த திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் சதாபிடேக விழாக்குழுவினர் ஒரு திட்டமிட்டுள்ளனர். கோவை திரு. ந. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் அக்குழு பணியாற்றி வருகின்றது.

மேலும் 12-9-67 அன்று தருமை மகாசன்னிதானம் அவர்கள் நம் பிள்ளை அவர்களை நேரே வரவழைத்து "சைவம் பெருக்கும் சீலர்" என்ற பட்டமும் கொடுத்து ஆசீர்வதித்தருளினார்கள்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் நம் பிள்ளையவர்களின் பெருந்தகைமைக்கு, அருந்தொண்டுகளுக்கு, ஆக்க வேலைகளுக்கு, எழுச்சி மிக்க உரைகளுக்கு, முதுமையிலும் தளராது சமயப் பணிபுரியும் ஆற்றலுக்கு பொதுவாகத் தமிழுலகும் சிறப்பாகச் சைவவுலகும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. ஒரு தனி மனிதனால் செய்ய முடியாத பல செயல்களை இளமை முதற்கொண்டே பல சான்றோர்களின் ஆசித்திண்மை நலம் பெற்று காலத்தால் செய்த இப்பெரியாரின் பெருமையை எவ்வளவு சிறப்பாகக் கூறினாலும் தகும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் இவர்கள் கல்வியலுவலராயிருந்த காலத்தில் திருமயிலத்துக்கு ஒரு முறை வந்தார்கள். அங்கு அவ்வமயம் ஞானச் செங்கோலோச்சி வந்த பதினெட்டாம்பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் தங்கள் மடத்தின் சார்பில் ஏதாவதொரு அறப்பணி தொடங்க எண்ணியிருந்ததைப் பிள்ளையவர்களிடம் கூறியருளினார்கள். உடனே தமிழும் சைவமும் தழைத்தோங்க வேண்டும் என்னும் எண்ணத்தை உளத்திற் கொண்ட உத்தமராம் நம் பிள்ளையவர்கள் தமிழ்க்கல்லூரி ஒன்று நிறுவுமாறு ஆலோசனை கூறினார்கள். அதன் பின்னரே அங்கு 1938ல் தமிழ்க்கல்லூரி எழுந்தது. அது பின்னர் அரசியலார் ஒப்பத்தைப் பெறப் பல்லாற்றானும் பிள்ளையவர்கள் உதவியதை யான் நேரேயே அறிவேன். இதனைப் போன்று ஆர்க்காட்டில் கண்ணன் திருச்சபை

நிறுவி சுற்றுப்புற ஊர்களில் எல்லாம் காலஞ்சென்ற திரு. பூ. சமரபுரி முதலியார் அவர் களைக்கொண்டு சமயப் பிரச்சாரம் செய்ய ஆர்க்காட்டு அன்பர் திரு. வரதராசச் செட்டியார் அவர்களுக்குறு துணையாயிருந்தவர்களு மிவர் களேயாவார்.

இவ்வாறு பயன்மிக்க பல செயல்களை அங்கங்கு ஆற் றித் தாம் பிறந்ததனுல் பெற்ற பயனைத் தம் வாழ்நாளி லேயே துய்த்து வருகின்ற ஒரு பெரியவர் நம் பிள்ளையவர் களேயாவர்.

இவர்கள் இன்னும் ஒரு நூற்றாண்டு வாழ வேண்டும். தம் பழுத்த அனுபவங்களை வருங்கால மக்களுக்கு வாரி வழங்க வேண்டும். அதற்கு நம் பிள்ளை அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நோயற்றவாழ்வு நல்கி சிறந்த ஆற்றலும் அளிக்க அப்பெருமான் இணையடிகளையே வாழ்த்தி வணங்குகின்றேன்.

---

# யான் கண்ட சான்றோர்

( பூ. ஆலாலசுந்தரன் )

சான்றாண்மை என்பது பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளும் தன்மை என்பர் பரிமேலழகர். சான்றாண்மை என்ற கட்டிடத்திற்கு அன்பு, நாண், ஒப் புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் தூண்க ளாம். இதனை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்

என்ற திருக்குறள் விளக்குதல் காண்க. அன்பு என்பது சுற்றத்தார் மேலும் பிறரிடத்தும் உண்டாகும் அன்பு. நாண் என்பது பழிபாபங்களுக்கு அஞ்சுதல், எல்லோருக் கும் உதவிபுரிதல் ஒப்புரவு எனப்படும். பழகியவர்மேல்

கொண்டுள்ள பற்று கண்ணோட்டம் அல்லது தாட்சணியம் என்பர். எவ்விடத்தும் உண்மை பேசுதல் வாய்மை எனப்படும். இந்த ஐந்து பண்புகளும் சைவப்பெரியார் S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்களிடத்தில் களிநடம் புரியக் காணலாம். சைவசமயம் அன்பே சிவம் எனக்கூறும். திரு. பிள்ளை அவர்கள் அன்பின் வடிவம் எனக் கூறுவேனுகில் அது புனைந்துரையன்று.

''அன்பர்பணி செய்ய வெனை யாளாக்கி விட்டு
விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே''

என்ற தாயுமான சுவாமிகளின் திருவாக்கிற்கு இலக்காகப் பிள்ளை அவர்கள் தாம் கல்வித்துறையில் பல பொறுப்பான உயர்பதவிகள் பெற்றிருந்த காலத்தும் ஓய்வுபெற்ற பின்னரும் அன்பர்பணியிலேயே ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் பல ஊர்களிலும் கிராமங்களிலும் வாரவழி பாட்டுச் சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அச்சங்கங்களின் ஆண்டு விழாக்களில் தவறுமல் கலந்துகொள்வார்கள். நாம் பழி பாபங்களுக்கு அஞ்சவேண்டும் என்பதை அவர்கள் அடிக்கடி தமது சொற்பொழிவுகளில் எடுத்துக் கூறுவார்கள். அவர்கள் தமது உடல் நலத்தைப் பொருட்படுத்தாமல் மழை என்றும் வெயில் என்றும் பாராமல் பல மைல்கள் பிரயாணம் செய்து சமயத் தொண்டு ஆற்றிவருகின்றுர்கள். அவர்களது சொற்பொழிவுகள் எல்லாம் நூல்வடிவாக வர வேண்டும் என்பது என் ஆசை.

என்னை அவர்கள் சைவ சித்தாந்த மஹா சமாஜ செயற்குழுவில் 1934-ஆம் ஆண்டில் சேரும்படி செய்தார்கள் 1934-ஆம் ஆண்டில் சிந்தாதிரிப்பேட்டையில் நாவலர் சோமசுந்தர பாரதியார் ஒரு மகாநாட்டில் தலைமை தாங்கினுர்கள். அப்போது நான் கடவுள் வாழ்த்து பாடுவதற்கு அழைக்கப்பட்டேன். கூட்டம் முடிந்ததும் திரு. S. சோமசுந்தர பாரதியார் திருவாளர். S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்களைப் பார்த்து ''இந்த இளைஞர் சைவப்பற்று உடையவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துத் தமிழ் M. A. பட்டம் பெற்றவர். நீங்கள் அவரைச் சமயத்

தொண்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்'' என்றுகூறி என்னைப் பிள்ளை அவர்களிடம் ஆற்றுப்படுத்தினர். அது முதல் பிள்ளை அவர்களோடு யான் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பிள்ளை அவர்களின் அன்பின் பயனுல் S. S. L. C. Tamil Advisory Committee, Matriculation Tamil Syllabus Reorganisation Committee முதலிய குழுக்களில் 1939, 1940-ஆம் ஆண்டுகளில் இடம் பெற்றேன். பல அரசியல் தேர்வுக் குழுக்களிலும் அவர்களிடம் சேர்ந்து தொண்டு ஆற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர்களிடம் யான் கண்ட பண்புகள் பல. நேர்மை, நடுவுநிலைமை, வாய்மை, ஆள்வினையுடைமை, பொறுமை, சமயப்பொறை (Religious toleration) முதலிய அரிய பண்புகள் அவர்களிடம் விளங்கக் காண்கின்றேன். உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல், எளிய வாழ்க்கை, ஏழைகளுக்கு இரங்கல், இளைஞர்களை ஊக்குவித்தல், முதலிய பல அரிய பண்புகள் அவரிடம் விளங்குவதை அவரோடு பழகுபவர் நன்கு அறிந்துகொள்ளலாம்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்''

என்ற பொய்யாமொழிக்குப் பிள்ளை அவர்களின் தூய வாழ்க்கை எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அவர் இன்னும் பல்லாண்டுகள் இனிது வாழ்ந்து அன்பர்பணி செய்யவேண்டும் என்று தில்லையிலுள்ள அம்பலவாணரை யான் என் மன மொழி மெய்களான் இறைஞ்சுகின்றேன்.

வாழ்க பிள்ளை அவர்கள்! அவர்தம் தொண்டு வளர்க.

## புரட்டாசி மாத விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| 5 | (21—9—67) | உருத்திர பசுபதி நாயனர் விழா |
| 8 | (24—9—67) | திருநாளைப் போவார் நாயனர் விழா |
| 16 | (2—10—67) | அருணந்தி சிவாச்சாரியார் விழா |
| 25 | (11—10-67) | ஏனாதி நாத நாயனர் விழா |
| | do | கலைமகள் விழா |
| 28 | (14—10—67) | நரசிங்க முனையரைய நாயனர் விழா |

# உயர்திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்களின் அரும் பண்புகள்

சிவனடிமறவாச் சிந்தையராய்த் திருநீற்றொளியுடன் விளங்கும் பிள்ளையவர்கள்.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்"

என்னுங் குறளுக்கு இலக்கியமாய்த் திகழ்பவர்கள், யாவரிடத்திலும் அன்புபாராட்டுபவர்கள்; உலகில் நிகழும் பழிபாவங்களைக் கண்டு நாணி நடுங்குபவர்கள்; ஒல்லும் வகையால் செல்லும்வாயெல்லாம் பிறர்க்கு உதவி செய்பவர்கள்; பிறர் துன்பங்கண்டு கண்ணோடித்துடைப்பவர்கள்; எப்போதும் வாய்மையே பேசுபவர்கள்.

இத்தகைய சான்றாண்மையுடைய பிள்ளையவர்கள்,

"பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, யாவரிடத்தும் பணிவுடன் இன்சொல் பேசுபவர்கள்.

விருந்தோம்பும் பண்பினர்; செய்ந்நன்றி மறவாச் செம்மல்; நடுவுநிலை நீங்கா நற்பண்பாளர்; அடக்கத்தை அணிகலனாகக் கொண்டு திகழ்பவர்கள்; ஒழுக்கத்திற்கு உறைவிடமாக உள்ளவர்கள்; பொறுமைக்குப் புகலிடமாகவுள்ளவர்கள்; அழுக்காறற்ற அந்தணாளர்; புறங்கூறிப் பொய்த்துயிர்வாழாப்புங்கவர். தீவினைக்கு அஞ்சுபவர்; ஒப்புரவினால் கேடுவருமெனினும் அஞ்சாதவர்.

தமிழ்மொழியினையும் சைவசமயத்தையும் இருகண்களெனக் கருதி ஓவாது தொண்டு செய்து உயர்புகழ்பெற்ற பெரியாராகிய பிள்ளையவர்கள் எண்பதாண்டு நிறைவு பெற்றுத் தொண்டுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றார்கள். அருங்குணச் செம்மலாகிய பிள்ளையவர்கள் பன்னலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க எனப் பல்லாண்டென்றும் பதங்கடந்தானாகிய பரமனடி பணிந்து வாழ்த்துகின்றேன்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"—திருக்குறள்.

வெ. குஞ்சிதபாதம்

## பெரியோர்கள் பாராட்டுரைகள்

உயர் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள்! நானும் அடுத்து வரும் பிப்ரவரி மாதம் 21 ஆம் நாள் என் எண்பதாவது பிறந்தநாள் கொண்டாட இருக்கிறேன்.

பிள்ளையவர்களோடு எனக்கு நாற்பது ஆண்டுகளுக்கு மேலான பழக்கம். அவற்றுள் முதல் இரண்டு மூன்று ஆண்டுகள் அவர்களோடு நெருங்கிப் பழகியவன். அவர்கள் சேவையிலும் கலந்து என்னை முன்னிலும் புனிதமாக்கிக் கொண்டவன், அவர்களிடத்து நான் கண்டு களித்துவரும் அகத்தூய்மையும், இதயக் கனிவும், பிறரும் நல்வாழ்வு வாழ வேண்டுமெனும் அன்புப் பெருக்கமும் அதற்கான தன்னால் இயன்ற சேவை செய்து வரலும் வேறு எவர் பாலும் கண்டதில்லை. அவர்கள் சேவையை இன்னும் தொடர்ந்து செய்து வர அவர்களுக்கு முருகன் உடலும் நலமும் நீண்ட ஆயுளும் கொடுத்து அருள் புரிவானாக.

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை
இராசபாளையம்.

---

## எனது குரு

உயிருள்ள சொற்கள், ஊக்க மூட்டும் பேச்சுக்கள், திருந்திய கருத்துக்களை என் இளமை உள்ளத்தில் உணர்ச்சி பெற ஊட்டியவர்கள். யாவரும் தம் நற்கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்னும் ஆர்வ முடையவர்கள். சொல்லிய வண்ணம் நடந்து காட்டுந்தூயோர் எனது குரு தேவர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களே யாவர். குருமாருக்குரிய இவ்வியல்புகள் இவர்கள் பால் இயல்பாக அமைந்திருத்தலை இவர்களோடு நெருங்கிய தொடர்புடையார் யாவருமறிவர். கேட்குந் தொறும், கேட்குந் தொறும் மேன் மேலும் எழுச்சியூட்டும் இவர்கள் அருமைச் சொற்பொழிவுகளே என்னைச் சிவத் தொண்டனாக்கின. தம் கருத்துக்களில்

உறுதியுடையாரேனும் நாகரிகப் பண்பின் மிகுதியால் நெகிழ்ச்சியாக நடந்து கொள்வார்கள் இதனுல் இவர் கட்கும், இவர்களைச் சார்ந்தார்க்கும் சிலபோது தொல்லைகள் ஏற்படுவதுண்டு. சிவநெறியும், உலகமும் உய்தல் வேண்டு மென்னும் பேரன்பால் உருகும் உள்ள முடையவர்கள். இவர்கள் தம் அயர்விலாத் தொண்டால் என்போன்ருர் பலர் திருத்தொண்டில் உறைப்புடன் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் செயற் பாடுகள் தொண்டர்க்குரியனவல்ல, ஆட்கொள்ளும் குருவின் பண்புகளாகும்.

வித்துவான். மறை திருநாவுக்கரசு.
தூத்துக்குடி

---

உயர் சைவத்திருவாளர் எஸ். சச்சிதானந்தம் பிள்ளை B. A. L. T. அவர்கள் அரன் பூசை நேசமும், அடியார் பற்றும் கொண்டவர். மக்கள் மக்களாக வாழ வேண்டு மென்ற எண்ணத்துடன் தம் வாழ்நாள் முழுதும் இறை உணர்ச்சியையும், மக்கள் ஒழுகலாற்றையும் மக்களிடையே பரப்பிவரும் பெருத்தகையர்.

குலச்சிறை நாயனுர் திருநீறு இட்டவரைக் காணும் தோறும் வெற்றவே யடியாரடிமிசை வீழும் விருப்பினராய் இருந்தது போல திரு பிள்ளை அவர்களும் சிவவேடப் பொலி வடிவழகைக் காணும் போதெல்லாம் அவர்கள் தம்மினும் வயதால் சிறியவராயினும், அவர்களின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் பெற்றியர்.

இவர் சிறந்த சைவ சித்தாந்த நெறியைப் பின்பற்றி யவர் என்ருலும், வேதாந்த சிகாமணியாகிய காஞ்சி காம கோடி பீடாதிபதிகளிடத்தில் அன்பும் பணிவும் மிகுதியும் கொண்டு அவர்தம் திருவடிகளைப் போற்றி ஒழுகும் பண்பாளர்.

இவர்தம் உள்ளம் உண்மை எனக் கொண்டதை எடுத்துப் பாராட்டாமல் இரார் இதற்கு யானே ஓர்

எடுத்துக் காட்டு. என் நூலாகிய பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" எனும் நூற்கு மதிப்புரை எழுதிய போது, நூலைப் பொதுவாகப் பாராட்டிச் சிறப்பித்து எழுதியதோடு நில்லாமல் நான் அந்நூலில் சேக்கிழார் பெருமானார் திருவாசகத்தில் ஈடுபட்டிருந்ததைப் பல்லாற்றானும் விளக்கி இருப்பதைப் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளனர்.

எண்பதாண்டு வாழ்வாங்கு வாழ்ந்த இத்தகைய பண்பாளர் மேலும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்து சமய நெறிக்கும் மக்கள் சமூகத்திற்கும் அரும் பெரும் தொண்டு புரிய யான் வழிபடும் அம்மை அப்பனது பொன்னார் திருவடிகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்.

பாலூர். கண்ணப்ப முதலியார்

---

## "சிவ மேகம்"

சித்தாந்தப் பேரொளியே சிவஞான மத்தலைவ சீர்தே வாரம்
வித்தார மாய்ப் பொழியும் விரிமேக மேஅவனி விளக்கும்
[விண்ணே
இத்தார ணிக்குள்வய தெண்பதினை யேற்றிட்ட எழிலின்
[மன்னு
முத்தார மார்புடையோய் சச்சிதா னந்தசிவ பரம்போல்
[வாழி !

சுந்தரேசன் பிள்ளை
விழுப்புரம்.

---

## இதோ அப்பர் பெருமான்!

எண்பத் தோராண் டினிதிருந்த
எழிலார் நாவுக் கரசர்தமை
கண்க ளால்யாம் கண்டதில்லை;
காணில் இனையர் போலும் எனும்
எண்ணந் தன்னை வருவிக்கும்
இனிதாம் கோலம் தான்காட்டும்
மண்டு புகழ்சச்சி தானந்தம்
மாண்புற் றினிது வாழியவே!

—வல்லை-பாலசுப்பிரமணியம், B. A.

---

## திருவெண்ணீற்றழகர்

திங்கள் அணியும் செஞ்சடையான்
திருவடி மாறுப் பற்றுளமும்
பொங்கொளி வீசுந் திருநீறு
பொலியும் வதனத் திருவழகும்,
எங்கும் என்றும் சைவநெறி
ஏற்ற முறுபணி யுங்கொண்ட
எங்கள் சச்சி தானந்தம்
என்றும் வாழி! வாழியவே!!

—வ. பா. தாமரைக் கண்ணி,
சென்னை.

---

# வழிகாட்டி

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களைப் பல ஆண்டுகளாக நெருங்கி அறிகின்ற வாய்ப்பினைப் பெற்ற பலருள் அடியேனும் ஒருவனுவேன். அவர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோளும் உயர் நோக்கங்களும் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. நம்நாட்டில் கற்றேர் தொகைக்குக் குறைவு இல்லையென்ருலும், 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற அருள் வாக்கின்படி நடப்போர்

தொகை இன்றும் மிகக் குறைவாகவேயுள்ளது. 'அன்பே சிவம்' என்ற உரையை வாழ்க்கையில் கடைப் பிடிப்போர் நம்மிடை எத்தனை பேருள்ளனர்?

'வையத்து வாழ் வாங்கு வாழ்ந்து', வாய்மையே பேசித் தன்னலமின்றி உழைத்து உயர்ந்து விளங்கும் சிலருள் திரு. ச சச்சிதானந்தம் பிள்ளையவர்களும் ஒருவராவார். உலகத்தையெல்லாம் தம் சுற்றமாகக் காணும் பேரருளாளர்-இன்சொல்லையன்றி வன்மொழியறியாத பெருந்தகை. உயர் பதவிகள், பல வகித்த அறிவாளியானலும் எளிய வாழ்க்கையும் உயர் நோக்குமுடைய உத்தமராவார். இளைய பாரதத்தினர் எழிலும் ஒழுக்கமுமுடைய உத்தமர்களாக வாழவேண்டுமென்று அல்லும பகலும் கனவு காணுகின்ற சிந்தனைச் சிற்பியாவார். செல்லுமிடந்தோறும் கூட்டுவழிபாட்டின் மேன்மையினை விளக்கி வரும் உழைப்பாளர். தம்முடைய நிறைந்த அலுவல்களுக்குத் தமது முதுமை இடையூருக இருக்க விரும்பாத இளைஞராக விளங்குபவர். இத்தகைய பல உலகியல் பணியோடு சிவ பூசா துரந்தரராவார். தாம் சிறந்த சிந்தனையாளராக விருந்தும் நிறைய நூல்களைப் படிப்பதும் சாதாரண அறிவுள்ளவர்களும் பேசும் பேச்சினைக் கேட்டுக் குறிப்பெடுத்து வைப்பதுமான உயர்ந்த பண்பினைப் பெற்ற பெரியவராவார்.

இத்தகைய பல பண்புகள் நிறைந்த சான்ருேர் எண்பதாண்டு நிறைவு எய்துவது உலகம் செய்த நற்பேறு என்றே சொல்ல வேண்டும். தற்கால இளைஞர்கள் அவர்களது வாழ்க்கை முறையினைப் பின்பற்றினுல் வையத்துள் வாழ்வாங்கு வாழலாம். பிள்ளையவர்களும் தம் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதி வெளியிட்டால் பிற்கால உலகம் பெரிதும் பயன் எய்தும். அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று செந்தமிழ்ச் சொக்கரை இறைஞ்சுகின்றேன்.

எண்பதாண்டு ஆன இளைஞர் பல்லாண்டு வாழ்க!

அன்பன்,

க. வடிவேலாயுதன்

தாம்பரம்.

தமிழ்ப்பேரறிஞர், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதா நந்தம் பிள்ளை அவர்களின் சதாபிடேக விழாச் செய்தி கேட்டுப் புலவர் மன்றத்தார் களிபேருவகை பூக்கின்றனர். மாவட்டக் கல்வியலுவலராயிருந்த காலத்து திரு. பிள்ளை அவர்கள் தமிழ் வகுப்பினைக் கண்காணித்த முறையே தனிப் பெருமை வாய்ந்தது. மணிக்கணக்காய்த் தமிழ் வகுப்பிலிருந்து, மாணவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற அவர்கள் காட்டிய ஊக்கம் கூறும் தரத்ததுஅன்று. எங்காவது ஒருவகுப்பில் தமிழ் ஆசிரியர் நன்முறையில் போதித்திருந்தால் அவரைப் பாராட்டியும் இல்லையேல் தமிழ்ப்படிப்பு மேம்பாடு குறித்தும் அவர்கள் கண்கா ணிப்பு அறிக்கையில் அவசியம் எழுதியிருப்பார்கள். அய லவர் ஆட்சியில் அடிமையுற்றிருந்த காலத்தேயே தாய் மொழிக்குத் தனிப் பெருமை கொடுத்துச் செயலிலும் காட்டிய வீரப்பெருந்தகையார் திரு. பிள்ளையவர்கள் இன்னும் நூற்றாண்டு விழாவும் பெற்றுச் சிறந்து மிளிர எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

பி. சொ. சண்முகம் பிள்ளை
தலைவர்
புலவர் மன்றம்,
சென்னை-7.

காஞ்சி, தொண்டைமண்டலாதீனம்
குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்.

சைவத் திருவாளர். ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர் கள் பன்னெடுங்காலமாகத் தமிழகத்தார் எல்லார்க்கும் நன்கு தெரிந்தவர். அவர் சைவம் தழைக்கவும், திருமுறை களைப் பாராயணஞ் செய்யவும், ஆங்காங்குச் சமயாசாரி யர் திருநாட் கொண்டாட்டம் நடாத்தவும், சமயச்சொற் பொழிவுகள் நிகழவும், நிகழ்த்தவும் தம் வாணாள் முழுதும் அர்ப்பணம் செய்து வரும் மஹோத்தமர். 'நல்லுயிர்' என்று போற்றப்பெறுவோர் உலகிற் சிலரேயாவர். அச் சிலருள் முதல்வராக விளங்கும் சான்றோர் நம் சச்சிதாநந் தம் பிள்ளை அவர்கள். தமிழகத்தில் அவர்கள் தோற்று வித்த சபைகளும் சமயாசாரியர் குருபூஜைகளும் வார வழி

பாடு (சங்கங்) களும் பலபலயாண்டுகளாக வெவ்வேறூர் களில் நடைபெற்று வருகின்றன. பிறந்துமொழிபயின்ற பின் எல்லாம் சிறந்து சிவபிரான் சேவடிக்கே நற்பணிக ளைச் செய்து வரும் பெருமையுடையவர் இவரொருவரே யாவர். இது பலரும் இசைந்த உண்மை.

இத்தகைய சீர்மிக்க பெருமகனுர்க்கு இந்நாளில் நன்மக்கள் சதாபிஷேகம் செய்து வாழ்த்துவது நன்றி மறவாத நற்கடனுகும்.

வாழ்க சச்சிதாநந்தக் குரிசில்
வளர்க அவர் கடவுட் கொள்கைகள்.

---

## சபைகள் பாராட்டுக்கள்

தனி ஒரு மனிதனுல் சாதிக்கமுடியாத சிறந்த செயல் களைச் செய்துவருகின்ற போதிலும் காட்சிக்கு எளியவ ராயும் உண்மையிலேயே மிகப் பணிவுள்ளவராகவும் விளங்குவது அவர்களிடமுள்ள போற்றிப் புகழ்வதற்குரிய உயரிய பண்பாம். யார் எந்தக்கூட்டத்திற்கு அழைத் தாலும் மறுக்காமல் தன் வயதையும் பொருட்படுத்தாமல் சிரித்த முகத்தோடு அங்கு தோன்றுதல் அவர்கள் இயற்கைக்குணமாகும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டு மென்ற ஆர்வத்தால், உலகிலே மக்களிடைத் தற்சமயம் காணப்படுகின்ற கட்டுப்பாடற்ற ஒழுகலாறுகளைத் திருத்த வேண்டுமென்று அவர்கள் கூறி வருகின்ற உருக்கமான மொழிகள் யாவர் உள்ளத்தையும் கவரும் திறத்தனவா யுள்ளன. மேலும் பலருடைய சொற்பொழிவுகளையும் அவர்கள் கவனமாகக் கேட்டுக் குறிப்பெடுத்து வைத்திருக் கும் திறன் அவர்களது உயர்ந்த பண்பாட்டைக் காட்டு கிறது. அந்தக் குறிப்புகள் எல்லாம் செப்பம் செய்யப்பட்டு அச்சுவாகனமேறினுல் தமிழகம் பெரிய பயன் எய்தும். அதை இறைவன் விரைவில் அருள் புரிவார் என்று நம்புகிறேம்.

அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இத்தகைய பணிகளைச் செய்து கொண்டிருக்கத் தில்லைக்கூத்தன் அருள்புரி

வாராக. எண்பதாண்டு இளைஞராக அவர்கள் விளங்க வேண்டுமென்று எங்கள் பேரவா.

புரசைத் திருநெறிக் கழகத்தார்.

சைவப் பாதிரியார் என்று பாராட்டப்படும் சிவபூசைச் செல்வர் உயர்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் எண்பது ஆண்டு நிறைவெய்துவது பற்றித் தமிழக மக்கள் அனைவரும் களி பேருவகை அடைவர் என்று உறுதியாகக் கூறலாம்.

மக்கள் தொண்டு செய்பவர்களைப் பொதுவாக இருபிரிவாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் மக்கள் தொண்டினை ஒரு வணியாகப் பற்றித் தாம் முன்னேறுவர். மற்றொரு வகையினர் தங்கள் வசதிகளைப் பொருட் படுத்தாது உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றுனும் தங்களைப் பொதுப் பணிக்கு அர்ப்பணித்து விடுவர். அதனால் வரும் விளைவுகளைப் பற்றிக் கவலைப் படுவதுமில்லை. தற்கால உலகிற் முற்கூறிய வகையினர் அருகியிருப்பதையும் சிறிது சிந்தனை செய்வோர் எளிதில் உணரலாம்.

பிள்ளையவர்கள் பிற்கூறிய வகையினைச் சார்ந்த உத்தமத் தொண்டவராவார். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வித் துறையிலும் சமயத் துறையிலும் பெரும் பணியாற்றி வருகிறார்கள். "சொல்லப் பயன் படுவர் சான்றோர்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குப்படி பிள்ளையவர்கள் யாவருக்கும் விரைந்து உதவி செய்யும் இயல்பினர். சொற்பொழிவுக்கு எவர் அழைத்தாலும் தம் உடல் நலத்தைக் கூடப் பொருட்படுத்தாது பெருமிதமின்றிச் சென்று நிறைவேற்றும் இயல்பினர். அவர்களால் தொடங்கப் பெற்று வளர்ந்து வருகின்றவார வழிபாட்டுச் சங்கங்கள் மிகப் பலவாம். அத்தகைய ஆசிபெற்ற சபைகளுள் கற்பக விநாயகர் பக்த ஜன சபையும ஒன்றாகும்.

பிள்ளையவர்கள் பல்லாண்டு வாழக் கற்பக விநாயகர் கந்தப் பெருமானார் அருள் புரிவாராக;

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக!

கற்பக விநாயகர் பக்த ஜனசபையினர்,
கிழக்குத் தாம்பரம்.

வாலாஜாபேட்டை மங்களாம்பாள் பாடசாலையினர்.

திருவருட்பாங்கால் சதாபிஷேகம் பெறும் அருட்செல்வரே!

நீவிர் வாழ்க! தாங்கள் கல்விக்கும் சமயத்திற்கும் ஆற்றிய நற்பணிகள் இவ்வுலகம் உள்ளளவும் நின்று தங்கள் அரும்புகழைச் சாற்றிக்கொண்டே இருக்கும். உலகில் புகழொடு தோன்றினீர்கள்! பெறற்கரிய இம்மானிடப் பிறவியில் செயற்கரிய தொண்டாற்றி வரும் வாலுறை தெய்வமாக விளங்கி வருகிறீர்கள்! இஃது உலகம் அறியும்.

தமிழ்கூறும் நல்லுலகில் சமயப்பணியாற்றும் சைவக் கொழுந்தே

தாங்கள் இந்து மதத்தின் சிறப்புக்களையும் திருநீறு, திருமண் ஆகிய சமயச் சின்னங்களையும் பற்றி எடுத்துக் கூறி மக்களைச் சமயப் பற்றுள்ளவர்களாகச் செய்து வருகிறீர்கள். இதனால் இந்து மதத்தின் உயர்வு உலகில் சிறந்து விளங்குகிறது இறைவனால் அனுப்பப்பெற்ற திருவருட் செல்வர் என்றே தங்களைப் புனிதராகக் கருதிப் போற்றுகின்றோம், நாங்கள் இன்று காணும் நாயன்மாராகத் தங்களைக் கொள்ளுகின்றோம்.

மக்கள் தொண்டே தெய்வத் தொண்டெனக் கொள்ளும் மாண்புடையீர்!

ஏழைகளுக்கு அமுது படைத்தல், ஆவினம் காத்தல், உழவாரப்பணி, கோபுர தரிசனம், குடும்பப் பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியவற்றைச் சொற்பொழிவுகள் மூலம் செய்யச்செய்து மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் தங்களை மனமாரப் பாராட்டுகின்றோம். எங்கள்பள்ளியில் தாங்கள் திருமூலர் திருமந்திரத்திலிருந்து எடுத்துக் கொடுத்த பாடல்களைப் பிரார்த்தனையில் பாடிப் பயன்பெற்று வருகின்றோம்.

மக்கள் ஞானச் சுடர்விட்டு மேலும் உய்ய தாங்கள் நலங்கள் யாவும் எய்திப் பல்லாண்டு இனிதே வாழ திருமுருகன் தண்ணருளை மன மொழி மெய்களால் வழுத்துகின்றோம்.

இவ்வாண்டு இந்திய சுதந்திர தினமாகிய ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாள் சைவப் பெரியார் திரு சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி' அவர்களுக்கு எண்பதாண்டு

நிறைவு குறித்து நமது சபையினரும் மற்றும் இந்நகர மக்களனைவரும் பெருமகிழ்ச்சி எய்துகின்றார்கள்.

சைவப் பெருந்தகையார் அவர்கள் திரு பாகம்பிரியா அம்மையோடுறையும் ஸ்ரீ சங்கரராமேச்சுரப் பெருமானது திருவருளால் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க இன்னும் தொண்டாற்றும் வண்ணம் நீடிய ஆயுள் பெற்று நிறை பல நலங்கள் எல்லாம் எய்தி இன்புற்று வாழ்க! என நமது சபை வாழ்த்துரை கூறு மகிழ்கின்றது.

நேசம் நிறைந்த உள்ளமுடைய பிள்ளையவர்கள் நமது சபையில் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள். சபையின் 44, 48, 53ஆம் ஆண்டு நிறை விழாப் பேரவைகளில் அவைத் தலைமை தாங்கி ஆற்றிய பேருரைகளும், சபையின் பொன்விழா மலரில் ''சைவ சமயப் பாதுகாப்பு'' என எழுதியுள்ள கட்டுரையும் சபையின் அன்பர்களும் மற்றும் சைவ நன்மக்கள் பலரும் கேட்டும் படித்தும் பயன் பெற்றார்கள்.

''இறைகளோடிசைந்த இன்பமும், இன்பத்தோடிசைந்த வாழ்வும்'' அமையப் பெற்ற பெருந்தகையார், தமிழுக்கும், சமயத்துக்கும் ஆற்றி வரும் சிறந்த பணிகள் நம்மனைய பல்லோர்க்கும் கலங்கரை விளக்கமாகப் பல்லாண்டு பல்லாண்டு வழிகாட்டுமாக!

—தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையார்.

சென்னை, திருவான்மியூர்

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தினர்

அளித்த

## வாழ்த்துப்பாக்கள்.

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

செந்தமிழின் சுவையறிந்தோய்; சைவசம யக்கருத்தின்
சிறப்பு யாவும்
சந்தமுற நன்குணர்ந்தோய்; சிவனடியை மறவாத
சால்பு கொண்டோய்;
எந்தவிலை யினிலுநந்தம் மக்களெல்லாம் இறையன்பை
எய்தி வாழ
முந்தலுற வேண்டுமென்னும் எணமுடையோய்;
ஆண்டினிலே முதிர்ந்த ஐய!

வேண்டுகின்ற பொழுதெல்லாம் இறைவனருளேவேண்டும்
இயல்பார் மேலோய்;
தூண்டுபல அன்பரிடை வாரவழி பாடதனைச்
செய்யுமாறு
நீண்டபெரு முயற்சிசெய்து தாழாதே நடைபெறச்செய்
நீர்மையாள,
பூண்டபே ரறிவுடையாய்; சச்சிதா னந்தனெனக்
குறிக்கும் பேரோய்!
பலவாண்டு கல்வியெனும் பெருந்துறையில் தொண்டுசெய்து
பணியை ஆற்றிச்
சிலவாண்டு தில்லைநகர் அண்ணமலை நகரிற்
சேர்ந்தே ஓங்கும்
நலமாகும் பல்கலைசேர் கழகத்தில் பதிவாள
நாமங் கொண்டு
வலமாரச் செயல்செய்தாய்; நின்னுடைய நலம்அளவில்
வாய்க்கும் கொல்லோ?
எங்களுடை நூல் நிலையத் தினில்வேண்டும் அறிவுரைகள்
இனிதே கூறும்
அங்கம்வகிக் கின்றாய்நின் அறிவுரையால் பலநலங்கள்
அடைந்தோம்; இன்னும்
மங்கலஞ்சேர் ஆண்டுபல நீவாழ வேண்டுமின்று
வளமார் எண்பான்
துங்கமுறு பிராயஞ்சேர்ந் தெவருஞ்சீர் பேசுவ்வகை
சுடர்கின் றாயே.
நின்னுடைய முயற்சியினால் பல அவைகள் ஓங்குகின்ற
நிலைபெற் றெய்தும்
நின்னுடைய தூண்டுதலால் வாரவழி பாட்டவைகள்
நிமிரும்; எங்கும்
நின்னுடைய தொண்டாலே பலர்சைவ நலம்பெற்றார்:
நீண்ட ஆண்டு
நின்னுடைய வாழ்வுபெற இறைவனருள் செயஎன்றும்
நிமிர்ந்து வாழி!

சென்னை, இராயப்பேட்டை
ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினர்
அளித்த

# பாராட்டுரை

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சச்சிதா னந்தமெனு நற்பெயரேற்
குஞ்சைவப் பெரியோய்! நீதான்
இச்சியா திருக்கினுமே எழில்ஞானி

யாரடிகள் ஈந்தார் பட்டம்.

உச்சிபோற் றுஞ்சைவ சமயப்பா
திரியென்றே உலகு போற்றும்,
மெச்சியநின் ஒழுங்குமுறை எங்களுக்கோர்
காட்டாக மிளிர்வதன்றே. 1

உலகமெலாம் ஈடேற ஒளிபெறவே
உதவும்நல சமய வாழ்வென்
றலகில்பல காட்டுகளோ டான்றவிந்த
முதுமையிலு மார்வ மிக்கு
இலகுபல வூர்சென்று இளைக்காது
பணியாற்றும் இயல்பு பெற்ருேய்
நலமிகவே நானிலத்தில் நம்பர் அருள்
நனிபெற்று நன்கு வாழி. 2

சிவம்பெருக்கும் சமயமதைச் சீலமாக்
கொண்டுயர்ந்த சிறப்புப் பெற்ருேய்
தவம்பெருக்குந் தமிழமுதை நாட்டார்க்குப்
பகிர்ந்தளித்த நலமார் தோன்ருல் !
தவம்பெருக்கும் வாழ்வுபெற்ருய் தக்காராம்
பாம்பனடி ஞானி யாரால்.
பவம்பெருக்கும் வாழ்வதையும் பரமனடிக்
கர்ப்பணித்த பண்பார் ஐய ! 3

தமிழ்வேதம் உரைத்தபடி தண்முகமே
யின்சொல்லே பொறையே தாவில்
இமிழ்கடல்சூ ழுலகத்து எளியாரை
வலியாரை இணைக்குந் தன்மை
அமிழ்தெனுநல் லாசிமொழி அண்டினேர்
புண்படா தணைக்கும் பண்பு
தமிழ்க்கூட்டம் பிறகூட்டம் தள்ளாது
தொண்டாற்றும் தகவு என்னே ! 4

ஆரமே என்பாகப் பூண்டதொரு
ஐயர்க்குச் செய்யும் பூசை
வாரமே என்றுபல மக்கட்கும்
பல்லாண்டு பேசிப் பேசி
வாரமே வழிபாடு திங்களே
நாள்வழிபா டாற்றச் செய்த
தீரமே போற்றுதற்கும் நினைத்தற்கும்
எம்மனேர்க் கரிய தம்மா ! 5

எண்ணற்காம் உறுப்பதனில் ஏற்றமிகு
மிருகண்க ளென்ன நீதான்
பண்ணற்காம் பாலசுப்ர மணியசபை
தன்னேடு பாரோர் போற்றும்
அண்ணற்காம் நற்சைவசித் தாந்தசமா
ஜத்தைநீ அணியாய்ப் பெற்ருய்

நண்ணுந்தம் தலைமையினில் அவைபெற்ற
நலங்கள்பல நவிலற் பாற்றே! 6
முன்னையோர் பண்புகளை முடிபாகக்
கொண்டுநல பணிகள் செய்ய
பின்னையோர் பலரையுமே ஏவியநல்
பெட்புற்றேய்! பெரியோர் போற்றும்
அன்னையிலும் மேலான அருட்குகன்தண்
மயிலம்கல் லூரி யோடு
நன்னையம் பலபுரியும் ஆர்க்காட்டுக்
கண்ணன்சபை அமைத்த மேலோய்! 7
நுந்தம்மின் எண்பதாண் டகவைநிறை
விழாபோற்றும் பேற்றைப் பெற்றேம்
எந்தம்மின் பேறினுநீண் டுன்னூருண்
டகவைவிழா காண்ப தற்கு
அந்தம்மில் அண்ணலவன் அருட்செந்தி
லாதிபனின் அருள்சு ரக்க
சந்தங்கள் பலபாடிச் சந்ததமும்
அவனடியை யிறைஞ்சு வோமே. 8
அவனியோர் பலரோடு திரு. வி. க.
போற்றஅவன் நினைவாம் ஐய!
புவனியோர் நனிவாழ நின்னுசி
யுபதேசம் புகல்வாய் நன்றே.
சிவனினரு ளுறப்பெற்றுச் சீரான
நல்லுடலைச் சிறப்பக் கொண்டு
அவனினைவாய் அகிலத்தார் அணிவாழ
பல்லாண்டு வாழ்க நன்றே. 9

---

பாடல் இயற்றியோர்:—
வித்துவான்—அம்பை. இரா. சங்கரனார்.

**சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத் தலைவர்**
**சைவப்பெரியார்**
**திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்**
எண்பதாண்டு நிறைவு விழா
நன்னாளில் வழங்கிய

## பாராட்டுரை வாழ்த்திதழ்

செந்தமிழும் இந்துமதச் செந்நெறியும் பரப்பிமிகச்
சிறக்கச் செய்யும்
உந்துபெருங் குறிக்கோளே உயிர்நிலையா வகுத்துக்கொண்
டுழைக்க விற்போய்!

சந்தமுயர் புகழ்ச்சச்சி தானந்தப் பெருந்தகையாம்
சான்றோய்! நீதான்
நந்தம் அரும் அப்பரைப்போல் நயக்களண்பான்
ஆண்டுற்றாய்! நலமே வாழி! 1
கல்வியறி வொழுக்கமுதற் கட்டுரைக்கும் நலங்களெலாம்
கவினப் பெற்றுப்
பல்வகையிற் சிறந்தோங்கும் பண்புடையீர்! நல்லசிவப்
பணியே என்றும்
ஒல்வகையில் இடைவிடா தூற்றுதலே வாழ்க்கைஎனக்
கொண்டுயர்ந்தீர்!
நல்லவினைப் பாராட்டி நாங்கள்மிக மகிழ்கின்றோம்!
நலமே வாழ்க! 2
மெச்சுபல நலம்நிறைந்தோய்! மேதக்கோய்!
மிகச்சிறந்தோய்! விழுப்பம் மிக்கோய்!
நற்சைவப் பெருந்தகையோய்! நாடறிந்த கல்விநிலைத்
தலைவ! நல்லோய்!
சச்சிதா னந்தப் பேர்ச் சான்றோய்!நம் சிவநெறிக்கும்
தமிழ்மொழிக்கும்
பொற்புமிகப் பலதொண்டும் பொருந்தமிகப்
பலஆண்டாய்ப் புரிவோய்! வாழ்க! 3
சிறந்துயர்ந்த பெருந்தகையோய்! சிவசமயப் பாதிரியாம்
சிறப்பே பெற்றோய்!
திறந்தெரிந்த நற்சைவ சித்தாந்த சமாஜத்தின்
தலைவ! செம்மால்
அறந்தருகட் டளைகள்இரண்டு அன்புமிகச் சமாஜத்திற்கு
அமைத்து வைத்தோய்!
நிறைந்துனது நூற்றாண்டு விழாவும்யாம் கொண்டாட
நெடிது வாழ்க! 4
'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
எதுநேர்ந் தாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமைபொருள்'
என்றே மனத்திற் கொண்டு,
முன்னிமிக இளமைமுதல் முயன்றுமிகச் சிவத்
தொண்டின் முதிர்ந்து நிற்பீர்!
நன்னருமை வியந்துவந்து நாங்கள்மிகப்
போற்றுகின்றோம்! நன்று வாழ்க! 5
அன்பருளின் இன்புருவே! அறிவாற்றல் நலங்களெலாம்
அமைந்த தோன்றால்!
என்புரிவாய் யாண்டிருப்பாய் என்றாலும்,

சிவத்தொண்டே இயற்றும் நல்லோய்!
மன்பெரிதும் இறையுணர்வை மக்களிடைப் பரப்பிவரும்
மாட்சி மிக்கோய்!
நின்பெருமை யாம் அளக்கும் நீர்மைத்தோ? நலமிகநீ
நெடுநாள் வாழ்க! 6
மாசுமறு இல்லாத வாய்மைமிகும் ஒழுக்கத்தோய்!
மாண்பின் மிக்கோய்!
தேசுயர்ந்து பொலிவுதரும் "சிவசின்னம் அணிவதேன்?"
எனும்சிறந்த
ஆசறுநற் சிறுநூலை அருமைமிக வரைந்தளித்தோய்!
ஆர்வம் ஓங்கப்
பேசுமெலாம் நல்லசிவப் பேச்சாகப் பேசுகிற்போய்!
பெரியோய்! வாழ்க! 7
பாம்பன்எனும் பதியுதித்த பண்புமிகும் அடிகளார்
பரிவிற் செய்த
தீம்பனுவல் பலஆய்ந்து சிறக்கமிகப் பதிப்பித்த
செம்மால்! நின்போல்
தேம்பலவும் மிகப்போற்றச் சிவத்
தொண்டே வாழ்வினுயர் சிறந்த நோக்காத்
தாம்கொண்டார் எவர்?சச்சி தானந்தம் பிள்ளைஎனும்
சான்றோய்! வாழ்க! 8

(வேறு)

உண்மைப் பெரியோய்! ஒழுக்கமிக்கோய்! உயர்ந்த
குறிக்கோள் வாழ்க்கையினோய்!
நண்ணி வார வழிபாடு நாடு முழுதும் நடத்துவித்தோய்!
திண்மைச் சச்சி தானந்தச் சிறந்த நல்ல பெருந்தகையோய்!
அண்மை எண்பான் ஆண்டுநிறைவு
அடைந்தோய்! வாழி நீடூழி! 9

வாழிசச்சி தானந்தச் சான்றோர்! வளர்ந்தோங்கி
வாழி அவர்தொண்டும் மாண்புகளும்—வாழியரோ
நங்கள்சைவ சித்தாந்த நற்சமாஜம், புகழோ
டெங்கும் பரவி இனிது! 10

இங்ஙனம் : அன்புள்ள,

**சென்னைச் சைவ சித்தாந்த மகா**
**சமாஜத்தினர்**

பாடல் இயற்றியவர்,

**புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ; எம். ஓ. எல்.**

தமிழகம்செய் மாதவமே சைவ உருக்கொண்
டமிழ்தினும் மேலாம் அரனை—உமதுளத்தும்
மற்றும் பலருளத்தும் வாழ்விக்கும் மாண்புடையீர்?
இத்தரையி லேற்றநுமக் கார்? 1
சித்தாந்த நூற்பொருளைத் தேர்ந்தெங்கும் போந்தருளிச்
சித்தத்தே தூயவனைச் சிந்தித்துப்—பத்தருக்குச்
சாயாது போதிக்கும் சச்சிதா னந்தகுரு
தாயாய் அருள்வீர் தழைத்து. 2
இன்னம்பல் லாண்டெம் மிடைநிலவி வாழ்ந்திடவே
பொன்னம் பலவனருள் பூக்கவெனச்—சொன்னயமார்
நல்லீர்யாம் வேண்டிடுதும் நம்பன் றிருத்தாளைப்
பல்காலும் போற்றிப் பணிந்து. 3
எண்பதாம் ஆண்டு எழிலார் நிறைவிழா
மண்ணுளோர் போற்றவே வந்தறிஞர்—எண்ணிலோர்
நல்வாழ்த்தை ஏற்றருளும் நற்சச்சி தானந்தீர்
பல்லாண்டு வாழ்க பரிந்து! 4
மாநில மெங்கணும் வார வழிபாடிங்
கீன மிலாதபடி ஈடேற—ஆனந்தப்
பேர்கொண்டு வாழ்ந்துலவும் பெம்மா னுருக்கரந்த
சீருருவம் வாழ்க சிறந்து. 5

அன்புள்ள

**ஆ. த. சச்சிதானந்தம், தக்கோலம்.**

சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் எண்பதாண்டு நிறைவு விழா 15–8–67 அன்று இராயப் பேட்டை பால சுப்பிரமணிய பக்த ஜன சபையில் திவான் பகதூர் திரு K. S. இராம சாமி சாஸ்திரியார் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. காம கோடி பீடம் முதலிய பல இடங்களிலிருந்து அருளாசிகள் வந்தன. சபைத் துணைத் தலைவர் திரு சி. நடராஜ முதலியார் வரவேற் புரைக்குப் பின் அருள் திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தர்ம ரக்ஷாமணி K. பால சுப்பிரமணிய ஐயர் நம்சமாஜத் துணைத் தலைவர் திரு கோ. மு. முத்துசாமி பிள்ளை, திரு கே. கமலக்கண்ண முதலியார், திரு கீ. இராம லிங்க முதலியார் திரு சா. சுப்பிரமணியம், திரு. ஔவை து. நடராஜன் ஆகியோர் பாராட்டுரைகள் கூறினர். தலைவர் முடிவுரையும் விழாத் தலைவர் ஆசியுரையும் கூறிய பின் இரவு 9 மணிக்குக் கூட்டம் செயலாளர் நன்றியுரை யுடன் இனிது முடிந்தது.